வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 08.08.2022 திங்கட்கிழமை இதழ் : 244 பக்கங்கள் : 16

# சீன கப்பல் இலங்கை வராது!

## இந்தியாவின் எதிர்ப்புக்கு பணிந்தது இலங்கை அரசு

கொழும்பு, ஓக. 08

சீனாவின் உளவுக் கப்பல் என்று விமர்சிக்கப்பட்டு சர்வதேச அரசியல் நெருக்கடிக்கு உள்ளான யுவான் வாங் - 5 கப்பல் திட்டமிட்டபடி இலங்கைக்கு வராது என்று கூறப்படுகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் சீனா வெளிவிவகார அமைச்சரை கம்போடியாவில் சந்தித்துப் பேசியபோது இந்த முடிவு எட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்தியாவின் கடும் எதிர்ப்பை அடுத்து அந்தக் கப்பலை இலங்கை வரவேண்டாம் என்று எழுத்துமூலமாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தை இலங்கை கோரியுள்ளது. அத்துடன், இதுபற்றி இறுதி முடிவு எடுக்கும்வரை யுவான் வாங் 5 கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறும் அரசு தூதரகத்தை கேட்டுள்ளது. 15

# இலங்கைக்கு 5.1 கோடி டொலர் கடனை இடைநிறுத்தியது சீனா

கொழும்பு, ஓக. 08

இலங்கைக்கான 5. 1 கோடி டொலர் கடனை சீன அரசுக்கு சொந்தமான எக்ஸிம் வங்கி நிறுத்தி வைத்துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதல் கட்ட கட்டுமானத்திற்கு தேவையான கடனுதவியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 15

# இலங்கைக்கான கடனை ஜப்பானும் நிறுத்தியது!

கொழும்பு, ஓக. 08

இலங்கைக்கு வழங்கிய கடன் உதவியை ஜப்பான் நாடும் இடைநிறுத்தியுள்ளது.

ஜெய்க்கா ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை விரிவாக்கும் திட்டத்துக்காக நிதியுதவி வழங்கி வந்தது. இந்த நிதியுதவியே நிறுத்தப்பட்டுள்ளது. 15

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் சேர வேண்டும்!

## புளொட் மாநாட்டில் கட்சி தலைவர்கள் கூட்டாக வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 08

**தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைய வேண்டும் என்று புளொட்டின் அரசியல் பிரிவும் பதிவு செய்யப்பட்ட கட்சியுமான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய மாநாட்டில் பங்கேற்ற கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

இந்தத் தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியிலுள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

இந்தத் தேசிய மாநாட்டுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், "தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் வரவேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்", என்று வலியுறுத்தினார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்து செல்லக்கூடிய 15

# த. தே. கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும்!

## புளொட்டின் கூட்டத்தில் ரெலோ

யாழ்ப்பாணம், ஓக. 08

தமிழ் அரசுக் கட்சிக்குள் இப்போது வந்தவர்கள் அந்தக் கட்சியையும் -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாது ஒழிப்பதை ஏற்கமுடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு புளொட் கட்சியின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 10ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ரெலோ கட்சியின் தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். கூட்டமைப்பு பலமாக இருக்கிறது - இருந்தது. ஆனால், ஒன்றிரண்டு கறுப்பு ஆடுகளின் செயல்பாட்டால்தான் அது மக்களிடம் 15

# அமைச்சு பதவியை பெறுவது தமிழருக்கு செய்யும் துரோகம்!

## இப்படி சொல்கிறார் சிறீகாந்தா

யாழ்ப்பாண.ம், ஓக. 08

தமிழ் மக்களின் வாக்குகளால் தமிழ்த் தேசியம் பேசி பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்ட ஒன்றிரண்டு பேர் சர்வ கட்சி அரசு என்ற பெயரில் அமைச்சு பதவிகளை எடுக்க முயன்றால் அது தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு செய்யும் துரோகமாகும். அமைச்சு பதவி எடுக்கும் எண்ணங்களை அவர்கள் கைவிட வேண்டும்.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவரான 15

# இணைந்து பயணிக்க விரும்புகின்றோம்!

## ஈ. பி. ஆர். எல். எவ் கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 08

இணைந்து பயணிப்பதற்கான விருப்பத்தை தெரிவிக்கிறோம். இணைவதற்கு முன்முயற்சி எடுக்கப்பட வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

புளொட் கட்சியின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 10ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு கண்டு 15

# நாடு திரும்பும் கோட்டாபய எம். பியாகி பிரதமராவார்?

கொழும்பு, ஓக. 08

சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பும் கோட்டாபய ராஜபக்ஷ தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்து பிரதமர் பதவியைப் பெறுவார் என்று தென்னிலங்கை தரப்புகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னரும், அரசியலை விட்டு முற்றாக விலகுவதாக கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கை வெளியிடவில்லை. இதன்படி நாடு திரும்பும் கோட்டாபய மீண்டும் அரசியலில் ஈடுபட 15

# கிளிநொச்சி இ. போ. சவினர் இன்று பணிப்புறக்கணிப்பு!

கிளிநொச்சி, ஓக. 08

இலங்கை போக்குவரத்து சபையின் (இ. போ. ச. ) கிளிநொச்சி சாலையினர் இன்று திங்கட்கிழமை வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இ. போ. சவினருக்கு எதிராக நேற்று 4 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாக அவர்கள் கூறினர்.

கிளிநொச்சி 15

# லிட்ரோ எரிவாயு ரூ. 200 குறைந்தது!

கொழும்பு, ஓக. 08

எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாய் குறைக்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

நள்ளிரவு முதல் இந்த விலைகுறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. நாட்டில் அண்மைக்கால 15

# ஐ. நா. மனித உரிமைகளின் உயர்குழு இலங்கை வருகிறது!

## புதிய தீர்மானம் கொண்டுவரவும் திட்டம்

ஜெனிவா, ஓக. 08

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து நேரில் கண்டறிவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் மட்டக்குழு அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய - பசுபிக் பிரிவுக்கான தலைவர் ரொனி முங்கொவன் தலைமையிலான குழுவினரே நாட்டுக்கு வருகின்றனர்.

இதன்போது, அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதிய 15

## இப்படியும் நடக்கிறது...!

சர்வகட்சி அரசு - அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வதுபோல சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சுக்கள் வெற்றியளித்து வருகின்றன என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

வெற்றி என்று அவர் எதைச் சொல்கின்றார் என்பது தெரியவில்லை. ஆனால், அதுதொடர்பான பேச்சுக்கு சென்று வந்த எல்லாக் கட்சிகளுமே அதனை வரவேற்றிருக்கின்றன.

ஆனால், தாம் அந்த சர்வகட்சி அரசாங்கத்தில் இடம்பெறப்போவதில்லை என்றே பலரும் தெரிவித்து வருகின்றனர். இது ஒருவகையில் ஜனாதிபதிக்கும் வேலையை சுலபமாக்கி வருகின்றது.

இல்லையெனில், முப்பது பேருடன் அமையவுள்ள அமைச்சரவையில் இன்று பாராளுமன்றில் இடம் பெற்றுள்ள எல்லாக் கட்சிகளையும் உள்வாங்கி அமைச்சர் பதவி வழங்குவதெனில் அது ஜனாதிபதியால் சாத்தியமாகியிருக்காது. ஆனால், கிடைக்கின்ற தகவல்களின் படி அமைச்சரவையில் யார் யாரை எல்லாம் உள்வாங்குவது என்பதில் ஜனாதிபதி, பட்டியலை இறுதிசெய்துவிட்டாரென்றே தெரிகின்றது.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அந்த சர்வகட்சி அரசாங்கத்தில் இடம்பெறமாட்டாது என்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தாலும், அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் அதில் இணைய சம்மதம் தெரித்துவிட்டனர் என்று தெரிய வந்தது. இவ்வாறு தனது கட்சியில் சிலரை உள்வாங்குகின்றபோது அதனை சஜித் எப்படி ஜீரணிப்பார் என்பது இப்போதைக்கு சொல்ல முடியாதது.

இப்போது ஜனாதிபதிக்கு இருக்கின்ற சிக்கல் ஒன்றுதான். அரசாங்கத்தில் இணைய சம்மதம் தெரிவித்துள்ள கட்சிகளில் பொதுஜன பெரமுனவும் ஒன்று. அந்தக் கட்சி தமது கட்சி சார்பில் யார் யார் எல்லாம் அமைச்சர்களாக வேண்டும் என்பதை முடிவு செய்து ஜனாதிபதிக்குப் பட்டியலை வழங்கியிருக்கின்றது. அந்தப் பட்டியலைப் பார்த்ததும் திகைப்பில் இருக்கிறாராம் ஜனாதிபதி.

ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துவிட்ட ஜனாதிபதிக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றதாம். பொதுஜன பெரமுன கொடுத்த பட்டியலில் முதலில் இடம்பிடித்திருப்பவர் ஜேன்ஸ்டன் பெர்னாண்டோ என்றால் எப்படியிருக்கும் என்பதை இங்கே சொல்ல வேண்டியதில்லை. இந்தச் சிக்கலில் இருந்து ரணில் எப்படி வெளியே வருகின்றார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

ரணில் எதிர்கொள்ளும் அடுத்த சிக்கல், அமைச்சரவைக்கு மேலாக, கட்சித் தலைவர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவுக்கு தலைமை தாங்க தாம் தயாராக இருப்பதாக சஜித் தெரிவித்திருந்தமை ஞாபகம் இருக்கலாம். அந்தக் குழுவில் பாராளுமன்றில் இடம்பெற்றுள்ள கட்சிகளை மாத்திரம் உள்வாங்குவதா அல்லது அதில் இடம்பெற்றுள்ள கூட்டணிகளுக்குள் உள்ள கட்சிகளையும் தனித்தனியாக உள்வாங்குவதா என்பது குறித்தே ரணில் குழம்பிப் போயிருக்கிறாராம்.

பாராளுமன்றில் இடம்பெற்றுள்ள கட்சிகள் என்றால் கூட்டமைப்பு பாராளுமன்றில் தமிழ் அரசு என்ற பெயரிலேயே இருக்கின்றது. ஆனால் அதற்குள்ளே மூன்று கட்சிகள் இருக்கின்றன. அதேபோல ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரிலேயே பாராளுமன்றத்துக்குள் இருக்கின்றனர். ஆனால், அதற்குள் முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், சரத் பொன்சேகாவின் கட்சி, மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் கட்சி, ராஜித சேனரத்ன கட்சி இப்படி பல கட்சிகள்.

இப்படி தனித்தனிக் கட்சிகளுக்கு இடமளிப்பதெனில் அதுவும் முப்பதைக் கடந்துவிடும். பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று?

- ஊர்க்குருவி.

# யாழ். - கொழும்பு பஸ் சேவையில் முறையற்ற கட்டணம் அறவீடு!

யாழ்ப்பாணம், ஓக. 08

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதிக்குச் செல்லும் அதேபோன்று அங்கிருந்து கொழும்பு திரும்பும் அதி சொகுசு பஸ்களில் முறையற்ற வகையில் கட்டணங்கள் அற வீடு செய்யப்படுவது வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சாதாரண பொதுமக்கள், தமது பயணங்களுக்கான ஆசன முற்பதிவை செய்வதற்கு முயன்ற போது, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துக்கு மேலதிகமாக தொகை கோரப்பட்டுள்ளதாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

குறிப்பாக, முற்பகுதியில் இருக்கைகளை ஒதுக்கீடு செய்தல் உள்ளிட்ட சூட்சுமங்களையும் அவர்கள் பயன்படுத்தி கூடிய தொகையை அறிவிடுவதற்கு முயற்சித்ததோடு சம காலத்தில் காணப்படும் வாகனப் பயணங்களின் வீழ்ச்சியையும் பயன்படுத்தி இவ் வாறு எல்லையற்ற வகையில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசன முற்பதிவு செய்யும் முகவர்களுடன் பயணிகள் மேற்கொண்ட ஒலிப்பதிவுகளும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்நிலையில குறித்த ஆளுநர் கருத்து வெளியிடுகையில் வடக்கிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் அனைத்து பயணிகள் பஸ்களும் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுமாறு நான் வலியுறுத்துகின்றேன். மேலும், இவ்விதமாக செயற் படுவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு விசேட கரிசனை என்றார். (ஐ)

# வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்கள் சிலை திறப்புவிழா!



யாழ்ப்பாணம், ஓக. 08

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியின் மும்மூர்த்திகள் திருவுருவச் சிலைகள், விளையாட்டு முற்றம், சிறுவர் கண்காட்சி, பாடசாலை உள்ளக நடைபாதை மற்றும் புத்தாக்குநர் ஆய்வுகூடம் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 7.45 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பஞ்சராசா சுரேந்திரன் யாழ். கல்வி வலய விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம் , சிறப்பு விருந்தினர்களாக ஐ. தயாபரன் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், சிவா வைத்தீஸ்வரன் யாழ். ஐக்கிய வியாபார சங்க முகாமைத்துவ பணிப்பாளர், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# விபத்தில் மாணவி படுகாயம்; பேருந்தை மறித்த இருவர் கைது!

கிளிநொச்சி, ஓக. 08

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்தார்.

விபத்தை ஏற்படுத்திய இ. போ. ச. பேருந்தையும் அதன் சாரதியையும் பொலிஸார் விடுவித்தனர். அத்துடன், அந்தப் பேருந்தை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் மாணவியின் சகோதரர் உட்பட இருவரை கைது செய்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கிளிநொச்சி ஏ-35 வீதியில் பரந்தன் - முரசு மோட்டை பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது. மாணவி இ. போ. ச. பேருந்தை மறித்து ஏறியபோது, அவர் பேருந்தினுள் ஏறும் முன்பே சாரதி பேருந்தை எடுத்துள்ளார். இதன் போது, மாணவி நிலைதடுமாறி விழுந்து படு காயமடைந்தார்.

காயமடைந்த மாணவி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில், விபத்தின் பின்னர் சாரதி பேருந்தை நிறுத்தாமல் வேகமாகச் சென்றுள்ளார். இதையடுத்து மாணவியின் சகோதரரும் மற்றொருவரும் பேருந்தை வழிமறித்து தர்க்கத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது.

எனினும், சம்பவ இடத்துக்கு சென்ற தருமபுரம் பொலிஸார் விபத்தை ஏற்படுத்திய பேருந்தையும் அதன் சாரதியையும் அங்கிருந்து செல்ல அனுமதித்தனர். அத்துடன், தர்க்கத்தில் ஈடுபட்ட காயமடைந்த மாணவியின் சகோதரரையும் மற்றொருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேவாலயம்மீது தாக்குதல் சிலைகள், கூரை சேதம்!

மன்னார், ஓக. 08

மன்னார் சிலாபத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முசலி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கஜூவத்தை பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்றின் சிலையை, சிலர் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர்வாசிகள் பிரார்த்தனைக்காக தேவாலயத்துக்கு சென்றபோது, தேவாலயம் சேதமடைந்திருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

தேவாலயத்தின் மேற்கூரை மற்றும் கவசம் என்பன சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் மன்னாரில் பல இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், தாக்குதல் நடத்தியவர்கள் இது வரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விடுதி முற்றுகை 4 பெண்கள் கைது

கொழும்பு, ஓக. 08

கொழும்பு - கல்கிசை பொலிஸ் பிரிவில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபசார விடுதி சுற்றி வளைக்கப்பட்டதுடன், 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

விபச்சார விடுதியை நடத்தி வந்த பெண் உள்ளடங்கலாக நான்கு பெண்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பல்லேவெல, மாத்தறை, தெஹிவளை, கலபட ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 27, 35, 40, 61 வயதுகளையுடைய நான்கு பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தேர்தல் அரசியலுக்கு அப்பால்?

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பன்னிரண்டு வருடகால அரசியலை உற்று நோக்கினால், தமிழ்த் தேசிய அரசியல் என்பது முற்றிலும் தேர்தல் அரசியலாகவே சுருங்கிவிட்டது. தேர்தல் அரசியல் தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு பகுதியாக இருக்க முடியும். ஆனால், அது மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலாக இருக்க முடியாது.

இந்த பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி (விக்னேஸ்வரன் கூட்டணி) ஆகிய கட்சிகளுக்கும், கூட்டமைப்புக்கும் இடையில், அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. கூட்டமைப்பின்மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களின் அடிப்படையான இலக்கு, கூட்டமைப்பின் அதிருப்தி வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்வதே தவிர, அதனைத் தாண்டி எந்தவொரு புத்தாக்க அரசியல் செயல்பாடுகளும் அவர்களிடத்தில் இல்லை.

ஆரம்பத்தில் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் நோக்க அரசியலை – இப்போது பிரிந்து நின்று ஏனையவர்களும் முன்னெடுக்கின்றனர். கடந்த பன்னிரண்டு வருடங்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இது ஒன்றுதான். கட்சிகள் அதிகரித்ததைத் தவிர, வேறு எந்தவொரு விடயமும் ஏற்படவில்லை. தேர்தலில் வெற்றிபெற்று, பாராளுமன்றம் செல்வதால் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியுமென்றால், தமிழ் மக்களின் கணிசமான பிரச்னைகள் எப்போதோ தீர்ந்திருக்க வேண்டுமல்லவா. ஆனால், கடந்த பன்னிரு வருடங்களில், ஆகக் குறைந்தது, கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் பிரச்னையில்கூட, தமிழ் கட்சிகளால் முன்னேற முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், கூட்டமைப்பு தவறான பாதையில் செல்வதாகக் கூறி வெளியேறியவர்கள், தங்கள் செயல்பாடுகளில் மாறுபாடுகளை காண்பித்திருக்க வேண்டும். புதிய அரசியல் அணுகுமுறைகளின் ஊடாக தங்களை மாற்றுத் தரப்பாக அடையாளப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதனையும் எவரும் இதுவரையில் நிரூபிக்கவில்லை. உண்மையில் 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் ஒருபுறம் தேர்தல்கள் மூலம் தமிழ் மக்களை ஓர் அரசியல் திரட்சியாகப் பேணிக் கொண்டு, மறுபுறமாக பிராந்திய மற்றும் சர்வதேச தளங்களில் பலமானதொரு தமிழ் “லொபி“யை முன்னெடுத்திருக்க வேண்டும். அதன் அடிப்படையானது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதாக இருந்திருக்க வேண்டும். மக்கள் மட்டும் முதன்மைப்படுத்தப் பட்டிருக்க வேண்டுமேயன்றி, அமைப்புக்கள் சுலோகங்கள் முற்றிலுமாக கைவிடப்பட்டிருக்க வேண்டும்.

இந்த லொபியின் அடிப்படையாக இருந்திருக்க வேண்டியது, அரசியலமைப்பில் இருப்பதை சரியாகவும் முறையாகவும் அமுல்படுத்துங்கள் என்பதாகவே இருந்திருக்க வேண்டும். அவ்வாறான லொபியை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைத் தீவுக்குள் சாத்தியமான விடயங்களை கையாண்டிருக்க வேண்டும். மாகாண சபையை உச்சளவில் பயன்படுத்தியிருக்க வேண்டும். யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, புதுடில்லியில் ஓர் ஈழத்-தமிழ் அலுவலகத்தை திறந்திருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ வேறு.

மேற்குலக - குறிப்பாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களை சர்வலோக நிவாரணியாக கருதிக் கொள்ளும் போக்கே, தமிழ்த் தேசிய பரப்பில் காணப்பட்டது. இதற்கு எந்தவொரு கட்சியும் விதிவிலக்கல்ல. ஆனால், உண்மையோ வேறு. அதாவது, சர்வதேச அழுத்தங்கள் என்பவை ஏற்றஇறக்கங்களைக் கொண்டவை. கொழும்பின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளுக்கு அமைவாகவே அழுத்தங்கள் அமையும். இதுவரையில் இதுதான் நடந்தது. இதன் காரணமாகவே, கடந்த பன்னிரு வருடங்களில் தமிழ் மக்களின் ஆகக் குறைந்த எதிர்பார்ப்புகள்கூட நிறைவு செய்யப்படவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் புதிய அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முயல்வோர், இந்த விடயங்களை கருத்தில் கொள்ளாது விட்டால், தேர்தல்களுக்கான புதிய கட்சிகள் மட்டுமே உற்பத்தியாகிக் கொண்டிருக்கும். அடிப்படையான மாற்றங்கள் எவையும் ஏற்படாது. மக்களின் இருப்பைப் பாதுகாக்க முடியாத எந்தவோர் அரசியல் நிலைப்பாடும் காலத்துக்கு உகந்த அரசியலாக இருக்க முடியாது. உதாரணமாக மக்கள் வறுமையில் இருக்கின்றார்கள் என்றால், வறுமையைப் போக்குவதுதான் அரசியலின் முதல் இலக்காக இருக்க வேண்டும். உயர்ந்த நிலைப்பாடுகள் மக்களைப் பாதுகாக்காது.

# சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு!

**அலசுவது இராஜதந்திரி**

“ஓடிவிடலாம். ஆனால், ஒளிந்து விட முடியாது” என்று அமெரிக்கர் ஒருவரை கொலை செய்த பின்னர் விமானம் ஒன்றில் தப்பிச்சென்ற பலஸ்தீன தீவிரவாதிகள் சிலரை வான்வெளியிலேயே துரத்திச் சென்று மடக்கிப்பிடித்த பின்னர் அன்றைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் றீகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இச்சம்பவம் 1985ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது.

அன்று அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் கூறியதை பிரதிபலிப்பதாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் 58 இலங்கை இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளமையும் விளங்குகின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமது கவனத்தை மிக உன்னிப்பாகவும் காத்திரமாகவும் வெளிப்படுத்தியுள்ளமையையே அவரது வேண்டுகோள் விளங்குகின்றது.

யுத்தம் முடிவுக்கு வந்ததுமே பல இராணுவ உயரதிகாரிகள் வெளிநாடுகளில் தூதர்களாக பணிக்கு அமர்தப்பட்டனர். ஆனால், அவர்களின் யுத்த நடவடிக்கைகளை ஆதாரம் காட்டியதையடுத்து அந்தப் பதவிகள் பின்னர் வாபஸ் பெறவும்பட்டிருந்தன.

அத்துடன், இலங்கையில் இராணுவ பின்னணியைக் கொண்ட எவருமே மேற்கத்தேய நாடுகளில் இராஜதந்திர சேவைகளில் நியமனமாக முடியாது.

இலங்கையில் வேண்டுமானால் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முக்கிய நிறவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் இராணுவ பின்னணியைக் கொண்டோர் நியமனங்களைப்பெறலாம்.

ஆனால், வெளிநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும்விதத்தில்

இராணுவப் பின்னணியைக் கொண்டோர் பதவிகளை வகிக்க முடியாது. இதற்கு மூன்று

தசாப்த கால யுத்தத்தின்போது இலங்கையின் படை அதிகாரிகள் யுத்த அத்துமீறல்கள், குறிப்பாக 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற வகை தொகையற்ற யுத்த அத்துமீறல்கள் தொடர்பாக ஆதரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாகவே சர்வதேச ரீதியாக இலங்கை படையதிகாரிகளின் நியமனங்கள்

சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு தற்சமயம் 58 படையதிகாரிகள் கைது செய்யப்பட வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் வலியுறுத்தி கூறியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்

பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது. அச்சமயம் இலங்கை மீதான அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் குறித்த நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இறுக்கமாக மேற்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்பு சர்வதேச மட்டத்தில் பலமடைந்து வருகின்றது.

இதன் வெளிப்பாடாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் 58 படையதிகாரிகள் கைது செய்யப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எண்பதுகளின் ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைந்த காலம் முதல் அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் சகல தரப்பினராலும் மிகமோசமான முறையில் மீறப்பட்டு வந்திருந்தது.

ஆட்கடத்தல்கள், மின்கம்பத் தண்டனைகள், கொலைகள், கொள்ளைகள் என்று பல தரப்பட்ட விதத்திலும் அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் விரிவான முறையில் இடம்பெற்றிருந்தன.

இருந்தபோதிலும் இறுதிக்கட்ட யுத்தம் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற தருணத்திலேயே மிக மிலேச்சத்தனமான முறையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தன.

இதுகுறித்து யுத்தம் முடிவுற்ற காலம் முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்

பேரவையில் குறிப்பிடப்பட்டே வருகின்றன. அத்துடன், இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததொடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையால் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவது குறித்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இந்தத் தீர்மானங்களில் யுத்தக் குற்றங்களை இழைத்தோரெனக் கருதப்படுவோர்

விசரிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் புறக்கணிக்கப்பட்டு கண்துடைப்பாக ஒரு சில தீர்மானங்களே அரைகுறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன.


தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழ் பிரதேச காணிகள் பறிபோவது நிறுத்தப்படல், காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விவகாரம் என்பவை தொடர்ந்து அசட்டை செய்யப்பட்டு வருகின்றது. இதுவிடயத்தில், தமிழ் அரசியல் தரப்பினரும் அசமந்தப் போக்குடனிருக்கின்றனர் என்பதே குற்றச்சாட்டாக இருக்கின்றது.

இத்தகைய பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல்

பச்லெட் எண்ணிக்கையாகவே 58 இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட

வேண்டுமெனக்கூறியிருப்பது சர்வதேச சமூகமும் இலங்கையில் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விழிப்படைந்திருக்கின்றதென்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 08 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 23
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
மற்றவர்கள் விஷயத்தில் தலையிட்டு ஆலோசனைகள் கூற வேண்டாம். குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி உண்டாகும். செயலில் இழுபறி இருக்கும். பேச்சில் நிதானம் தேவை.

**இடபம்**
விரும்பியதை இன்று அடைவீர்கள். உங்கள் முயற்சிகள் பலிதமாகும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். யோகமான நாள். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
நீண்ட நாள் பிரச்னை முடிவிற்கு வரும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடங்களை சமாளித்து நன்மை காண்பீர்கள். தொழிலில் முன்னேற்றமான நிலை உண்டாகும். உங்களின் செல்வாக்கு உயரும்.

**கடகம்**
பிள்ளைகளின் நலன் குறித்த முயற்சியில் இறங்குவீர்கள். நிதிநிலை சீராகும். உங்களுடைய அணுகுமுறையால் தொழிலில் லாபம் காண்பீர்கள். யோகமான நாள்.

**சிம்மம்**
திடீர் பயணம் உண்டாகும் என்றாலும் அதனால் லாப நிலையை அடைவீர்கள். சந்திக்க நினைத்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நண்பர்கள் இடையே பிரச்னை தீரும்.

**கன்னி**
எதிர்கால வாழ்க்கையை நினைத்து தைரியமான முடிவு ஒன்றை எடுப்பீர்கள். உங்கள் திறமை வெளிப்படும். உங்களை சுற்றியுள்ளவர்களில் நல்லவர் யார் கெட்டவர் யார் என்பதை அறிவீர்கள்.

**துலாம்**
இழுபறியாக இருந்த வேலை முடியும். தம்பதி இடையே இருந்த பிரச்னை தீரும். தொழிலில் எதிர்பார்த்த வருவாய் உண்டாகும். உறவினரால் ஆதாயம் உண்டு. பேச்சால் பிறரை கவர்வீர்கள்.

**விருட்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய வேலைகளை போராடி முடிக்க வேண்டியதாக இருக்கும். மனம் குழப்பம் அடையும். வேலையில் ஆர்வம் குறையும். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் தாமதம் உண்டாகும்.

**தனுசு**
அலைச்சல் கூடும். நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும். மறைமுக பிரச்னைகள் தொல்லைகளை ஏற்படுத்தும். எதிர்பார்த்தவற்றில் தடை உண்டாகும். யாரிடமும் விவாதம் வேண்டாம்.

**மகரம்**
விவேகத்துடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பழைய கடன்களை அடைப்பீர்கள். நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தினரின் விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
தொழிலில் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு. மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்வீர்கள். குடும்பத்தினரின் எதிர் பார்ப்பை நிறைவேற்றி பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம்**
வராமல் போன பணம் இன்று உங்கள் கைக்கு வரும். நீண்ட நாள் பிரச்னை தீரும். வியாபாரத்தில் ஏற்பட்ட தேக்க நிலை விலகும். மனக்குழப்பம் தீரும். நடக்காது என்று நீங்கள் நினைத்திருந்த செயல் இன்று நடந்தேறும்.

# கருணாநிதி 4ஆவது நினைவுதினம் சென்னையில் அமைதிப் பேரணி!



*சென்னை, ஓக. 08*

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 4ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் அமைதிப்பேரணி நேற்று இடம்பெற்றது.

அண்ணாசாலை முதல் கருணாநிதி நினைவிடம் வரை இந்த அமைதிப் பேரணி நடைபெற்றது. கொரோனா தொற்று காரணமாக கடந்த இரு ஆண்டுகள் கருணாநிதியின் நினைவுநாள் எதுவும் நடைபெறவில்லை. இந்நிலையில், நேற்றைய தினம் கருணாநிதியின் நினைவுநாளை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று அண்ணா சாலையிலுள்ள கருணாநிதி சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப்பேரணி நடைபெற்று வருகிறது.

சென்னை அண்ணா சாலை முதல் மெரினாவிலுள்ள கருணாநிதி நினைவிடம் வரை அமைதிப்பேரணி நடைபெற்றது.

மெரினாவில் முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கருணாநிதியின் இல்லமான கோபாலபுரத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் சென்றார்.

(ஐ)

# தமிழக மாணவிகளின் செயற்கைகோள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தம்!



*சென்னை, ஓக. 08*

தமிழக அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகளின் கூட்டு இணைப்பில் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் எஸ். எஸ். எல். வி. ஏவூர்தி மூலம் விண்ணில் ஏவப்பட்டது. திட்டமிட்டபடி சென்ற எஸ். எஸ். எல். வி. ஏவூர்தி செயற்கைக் கோள்களை புவிவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியது.

மேலும், குறைந்த எடையுடைய செயற்கைக்கோள்களை எடுத்துச்செல்லும் வகையில் உருவாக்கப்பட்டஎஸ். எஸ். எல். வி. ஏவூர்தி முதன்முறையாக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இது விண்வெளித் துறையில் புதிய மைல்கல் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அரசுப் பள்ளி மாணவிகளின் கூட்டிணைப்பு, இஸ்ரோவின் குறைந்த எடையுடைய ஏவூர்தி எனஎஸ். எஸ். எல். வி. ஏவூர்தி பல சிறப்புகளை தன்னுள் கொண்டுள்ளதால், இந்த வெற்றி புதிய சாதனையாகவும் கருதப்படுகிறது.


எஸ். எஸ். எல். வி. மூலம் 500 கிலோ வரையிலான செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தகைசால் தமிழர் விருது கம்யூனிஸ்ட் தலைவருக்கு!

*சென்னை, ஓக. 08*

தமிழக அரசின் ‘தகைசால் தமிழர்’ விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையொட்டி, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் நல்லகண்ணுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்த ஆண்டுக்கான ‘தகைசால் தமிழர்’ விருதாளரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில், 2022ஆம் ஆண்டுக்கான ‘தகைசால் தமிழர்’ விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். தனது இளம் வயதை சிறைச்சாலையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தார். ஏழை மக்களுக்காக குரல்கொடுத்து, சமூக நல்லிணக்கத்தையும், சுற்றுச்சூழலையும் காக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.

தன்னலமற்ற சிறந்த அரசியல் வாதியாகவும் செயல்பட்டு, தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு அளித்த தமிழராக விளங்குகிறார். அதனால், 2022ஆம் ஆண்டுக்கான ‘தகைசால் தமிழர்’ விருதுக்கு ஆர்.நல்லகண்ணுவை தேர்வுக் குழுவினர் ஒருமனதாக தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர். நல்லகண்ணுவுக்கு 10 இலட்சம் (இந்திய) ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழை வரும் 15ஆம் திகதி நடைபெறும் சுதந்திர தின விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்க விருக்கிறார் - என்றுள்ளது.




# புளொட்டின் அரசியல் பிரிவின் பொதுச் சபை கூட்டம் நடந்தது!

யாழ்ப்பாணம், ஓக. 08

புளொட்டின் அமைப்பின் பதிவு அரசியல் பிரிவும் - பதிவு பெற்ற கட்சியுமான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச்சபை கூட்டம் நேற்று முன்தினம் இணுவில் பகுதியிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. இதன்படி அந்தக் கட்சியின் தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் செயலாளராக நா.இரட்ணலிங்கமும், பொருளாளராக க. சிவநேசனும், ஊடகப் பிரிவின் தலைவராக பா. கஜதீபனும், சர்வதேச பேச்சாளராக செ.ஜெகநாதனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் பொதுச் சபைக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளில் இயங்குபவர்கள் உட்பட145 பேராளர்கள் வரை கலந்து கொண்டிருந்தனர். அத்துடன், சில தீர்மானங்களும் எட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைக்க முயல்கிறார் ரணில்!

## சீ. வீ. கே. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 08

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருடைய பாணியிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கின்ற முதலாவது தேங் காயை உடைத்து இருக்கிறார் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் வட மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உரையாற்றும்போதே சீ. வீ. கே. சிவஞானம் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்தனர் என்று ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார்.

அந்தளவுக்கு தமிழ்த் தேசி



யக் கூட்டமைப்பு தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்து செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியை தொடர்வார். என்னைப் பொறுத்தவரையில் தமிழ் அரசு கட்சியின் உப கட் சியின் நிகழ்வே இது. இங்கு அங்கம் வகிப்பவர்கள் அனை வரும் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே. தற் போது அது உடைந்து இருந் தாலும்கூட அடிப்படையில் தமிழ் அரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது.

தேசிய அரசாங்கம் அமைக்கப்படலாம் என்று தற்போது பேசப்பட்டு வருகின்றது. ஆனால், தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என நான் நம்பவில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இலவச மருத்துவ முகாமால் நான்கு கிராம மக்கள் நன்மை!

மன்னார், ஓக. 08

மடு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் இலவச நடமாடும் மருத்துவ முகாமும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஞா. குணசீலனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நடமாடும் மருத்துவ முகாம், மருத்துவர் எல்மர் எட்வேட், சமூக சேவகர் இ. எட்வின் அமல்ராஜ் மற்றும் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி மற்றும் பங்களிப்புடன் இடம்பெற்றது.

பூமலந்தான், சோதி நகர், மடு வீதி சின்னப்பண்டிவிரிச்சான் ஆகிய கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தந்து இலவச மருத்துவ சேவையை பெற்றுக் கொண்டதுடன் தேவையானவர்கள் மூக்குக் கண்ணாடியையும் பெற்றுக் கொண்டனர். (ஐ)

# திருட்டை காட்டிக்கொடுத்ததால் நாயை வெட்டிக் கொன்றனராம்

## சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஓக. 08

போதைப்பொருளுக்கு அடிமையாகி ஊரில் திருட்டுக்குச் செல்லும்போது தம்மை பார்த்து குரைப்பதாலேயே நாயைக் கொலை செய்ததாக சந்தேக நபர்களில் ஒருவர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

நாயை கைக்கோடாரியினால் வெட்டிக் கொலை செய்தவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அதனை காணொலி பதிவு செய்தவரே இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நாய் ஒன்றை கைக்கோடாரியினால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது. இந்தச் சம்பவம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றமை விசாரணைகளில் தெரிய வந்தது.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்திய கைக்கோடாரி மற்றும் அதனை காணொலி எடுத்த அலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

"போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுகளில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குரைத்துக் காட்டிக்கொடுத்து விடும். இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுகளுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால்தான் அந்த நாயைக் கொலை செய்தோம்.

கைக்கோடாரியால் நாயை வெட்டி கொலை செய்தவர் அன்றைய தினம் போதையில் இருந்தார். சில நாள்களுக்கு முன்பாகவே நாயை கொலை செய்துவிட்டோம். அதன் காணொலி சகோதரனின் அலைபேசியில் இருந்தது. அவர் தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது" என்று காணொலியை பதிவு செய்தவர் விசாரணையின்போது தெரிவித்தார். சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# ஒவ்வொரு மணித்தியாலமும் 32 இலங்கையர் வெளியேறுகின்றனர்!

கொழும்பு, ஓக. 08

இலங்கைப் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்து மக்கள் நெருக்கடியை சந்திக்க ஆரம்பித்த பின்னர், நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருந்தது. தற்போதைய நிலையில், ஒவ்வொரு மணி நேரமும் 32 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 181 நாட்களில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 4 மடங்கானவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மத்திய வங்கியின் தரவுகள் இதனை வெளிப்படுத்தியுள்ளன.

சட்டவிரோத படகுப்பயணங்கள் மூலம் தமிழகத்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் செல்பவர்கள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. உடல் ரீதியான துஷ்பிரயோகம், சுரண்டல், நீண்ட வேலை நேரம், மனித உரிமை மீறல்கள், சம்பளம் இல்லாமை அல்லது குறைவான ஊதியம், மரணம் மற்றும் அங்கவீனம் போன்ற அபாயங்கள் இருந்தபோதிலும், வெளிநாட்டு வேலைகளைப் பெறும் பெண்களும் ஆண்களும் இந்த ஆண்டில் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த வருடம் ஜூன் மாதம் வரையான ஆறு மாதங்களில் ஒவ்வொரு நாளும் 777இற்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்தக் காலப் பகுதியில், 140,701 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளிற்கு கட்டுமானப் பணி, பணிப்பெண்களாக சென்றுள்ளனர்.

பெரும்பாலான இலங்கையர்கள் இப்போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது வேலை முகவர்களின் தலையீடு இல்லாமல் தாங்களாகவே வெளியேறுகின்றனர்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை வெளியேறியவர்களின் எண்ணிக்கை (140,701), நடந்த ஆண்டு முழுவதும் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். கடந்த ஆண்டில் 117,952 பேர் நாட்டிலிருந்து வெளியேறினர்.

2021 ஆம் ஆண்டின்ஜனவரி முதல் ஜூன் வரை 30,757 பேர் வெளிநாடு சென்றிருந்தனர்.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள், இலங்கையின் மிகப்பெரிய நிகர அந்நிய செலாவணி ஈட்டுபவர்களாக இருப்பதோடு, வெளிநாட்டுக்குச் சென்று வேலை செய்வதன் மூலம் தேசிய வேலையின்மை விகிதத்தையும் செயற்கையாகக் குறைவாக வைத்திருக்கின்றனர். ஜூன் வரையிலான ஆறு மாதங்களில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் 1.61 பில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ.576.02 பில்லியன்) அனுப்பியுள்ளனர். மத்திய வங்கியின் தரவுகளின்படி, இந்த ஆண்டு ஜூன் மாதம், வெளிநாட்டு தொழிலாளர்கள் மூலம் திறைசேரி 274 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளது. (ஐ)

# 10 பவுண் நகைகள், பணம் சண்டிலிப்பாயில் திருட்டு!

மானிப்பாய், ஓக. 08

சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் வீடொன்றிலிருந்து 10 பவுண் நகைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பணங்கள் என்பன என்பன திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வீட்டில் கணவனும் மனைவியும் மட்டும் வசித்து வரும் நிலையில் அவர்கள் இருவரும் வேலைக்குச் சென்ற பின்னர், வீட்டின் பின்பக்க யன்னலை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள், அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்கள் அந்த வீட்டில் தங்கிச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் 100 நாள் போராட்டம் கவலை தருகின்றது!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

வவுனியா, ஒக. 08

**வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் 100 நாள் செயல்முனைவு கவலையளிப்பதாக வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். குறித்த விடயம் தொடர்பாக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.**

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்-

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவனாது 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் என்ற தொனிப்பொருளில் செயல்படுகின்றது. நாம் அவர்களை கேட்கிறோம் வட, கிழக்கில் எங்கு கௌரவத்தை பார்க்கமுடியும்? இராணுவமயமாக்கல் மற்றும் சிங்கள உள வாளிகளின் மேலாண்மை, வன்புணர்வு, கொலைகள், கடத்தல்கள், மற்றும் உளவு பார்ப்பதற்காக பணம் பெற்றுக்கொள்ளுதல் இவைகள்தான் உங்கள் கௌரவமா?

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டமானது அரசமைப்பு ரீதியாக அதிகார ரீதியாக பரவலாக்கப்படும் உரிமையை உறுதிப்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். 1987இல் தமிழர்களாலும் அவர்களின் அரசியல் தலைவர்களாலும் 13ஆவது திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

13வது திருத்தத்தை ஏன் நீங்கள் கோருகிறீர்கள்? இந்த பொருளாதார நெருக்கடியின் போது, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை கட்டாயப்படுத்த இந்தியாவுக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால், அது செய்யவில்லை.

மேலும், 13வது திருத்தம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. நாங்கள் பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட வட, கிழக்கில் வாழ விரும்புகிறோம். மக்களுக்கு 13ஆவது திருத்தம் பிடிக்குமா அல்லது இறையாண்மை பிடிக்குமா என்று பொதுவாக்கெடுப்பு நடத்தி மக்களிடம் கேளுங்கள். அதுவே ஜனநாயகம்.

அத்துடன் "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்பதாக இந்த ஒருங்கிணைப்பு குழு சொல்கின்றது. இது சம்பந்தன் அல்லது ஜனாதிபதி ரணிலிடம் இருந்து நீங்கள் கட்டளையை பெற்றதுபோல் தெரிகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

நாம் சொல்கிறோம் அதிகாரப் பரவலாக்கம் ஒரு ஜனநாயகம் அல்ல,அதிகாரப் பகிர்வு என்பதும் ஜனநாயகம் அல்ல. நாங்கள் மட்டுமின்றி, ஈழத் தமிழர்கள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், புலம்பெயர் தமிழர்கள் என அனைவரும், பொது வாக்கெடுப்புக்கே அழைப்பு விடுக்கின்றனர்.

தமிழர்கள் எத்தகைய அரசியல் கட்டமைப்பை விரும்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க தமிழர்களை அனுமதிக்குமாறு நாங்கள் கேட்கும் கருவி அதுவே. வாக்கெடுப்பில் தமிழர்கள் தேர்ந்தெடுக்கும் வகையில் பல விசயங்களை உள்ளடக்களாம் . இந்த முறையே ஜனநாயகம் ஆகும். இருட்டில் இருந்து வெளியே வந்து இது வேண்டும், அது வேண்டும் என்று சொல்லாதீர்கள்.

எனவே, இந்த 100 நாள் செயல் முனைவு குழு வீட்டுக்கு சென்று பொது வாக்கெடுப்பை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தமிழர்களுக்கு அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரம் வேண்டும். இந்த சுதந்திரங்கள் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும். அதுவரை புலம்பெயர் தமிழ் மக்கள் இங்கு முதலீடு செய்ய மாட்டார்கள்.

பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரம் இல்லாமல் 1983 இல் தமிழர்களின் பொருளாதாரத்துக்கு என்ன ஆனது என்பது அனைவருக்கும் நினைவிருக்கிறது. எனவே, வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு என்ற விடயத்தை பயத்தில் உச்சரிக்காமல், வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு என்றபெயரை எடுத்துக்கொள்வது ஒரு போலி நாடகம் - என்றனர்.

---

# ஐ. எம். எவ். 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக் கேட்கிறது!

## லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி.

கொழும்பு, ஓக. 08

சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கான நிபந்தனையாக 40 அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும்படி கோருகிறது என்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தனியார் மயப்படுத்தும் திட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் போது, எதிர்க்கட்சியாக பொறுப்புடன் செயல்படுவோம் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு, அரசாங்கத்துக்கு தேவையான ஆதரவை வழங்க முடியும் எனத் தெரிவித்த அவர், அதற்காக அரசாங்கத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய அவசிய மில்லை எனவும் குறிப்பிட்டார்.

இன்றைய அரசாங்கம் ராஜபக்ஷக்களின் குப்பை லொறி என்பதால் அதில் இணைய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் கூறினார்.

(ஐ)

---

# அவசரகால சட்டத்தில் திருத்தங்கள் அறிமுகம்!

## சிறப்பு வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஒக. 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த ஜூலை 18 அன்று பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானியின் ஊடாக ,நத்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, "தேடல் மற்றும் கைது" தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் நீக்கப் பட்டு அதே குறியீட்டின் பிரிவு கள் 408 மற்றும் 410 முதல் 420 வரை அவசரகாலச் சட்ட விதி கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேல் நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்படும் தண்டனை தொடர்பான குற்றவியல் சட்டத்தின் 365, 365 (ஏ) மற்றும் 365 (பி) அவசர உத்தரவுகளும் நீக்கப்பட்டுள்ளன.

(ஐ)

---

# பதவிகளுக்கு கட்சிகளை சேர்க்காமல் நாட்டுக்காக ஒன்றிணைக்க வேண்டும்!

## ரிஷாத் பதியுதீன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 08

பதவிகளுக்கென கட்சிகளை ஒன்று சேர்க்காமல், நாட்டுக்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும், அந்த வேலைத்திட்டத்துக்கு எமது ஆதரவு கிடைக்கும் எனவும் ஜனாதிபதியிடம் தாம் தெரிவித்தார் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் குறிப்பிட்டார்.

சர்வகட்சி தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து பேசிய அவர்,

"நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மாற்றி அமைப்பதற்காகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையிலும், வரிசையில் நின்று பொருட்களை பெரும் கலாசாரத்தை முற்றாக ஒழிக்கும் வகையிலும் ஜனாதிபதி எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம்.

மேலும், காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிவைத்து கைது செய்யப்பட்டமை மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்டாலினின் கைது தொடர்பிலும் எமது ஆட்சேபனையையும் கவலையையும் தெரிவித்தோடு இவ்வாறான பயமுறுத்தல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை இன்னும் அதலபாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

19 ஆவது திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து, அதனை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும், பாராளுமன்றத்தில் அமைச்சுக்களை கண்காணிக்கும் குழுக்களை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம். அத்துடன், அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி, வகைதொகையின்றி ஆட்களை கைது செய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்துவதுடன், அவசரகாலச் சட்டத்தில் தொடர்ந்து நீடிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினோம்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி ஆட்சிக்கு வந்தவர்கள், கடந்த காலங்களில் நாட்டினதும், மக்களினதும் நலனைக் கருத்தில் கொள்ளாது செயல்பட்டமையை உணர்த்தியதுடன், இனவாதத்தை விதைப்பதன் ஊடாக தங்களது அரசியல் இருப்பு நீடிக்கும் என்ற தப்பெண்ணம் கொண்டு செயற்பட்டதனால்தான்,

இந்த நாடு இவ்வாறான கீழ் நிலைக்கு தள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆகையால், எதிர்காலத்தில் இனவாத சக்திகளின் கரங்களை ஓங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் எனவும், அந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்" - என்றும் கூறினார்.

---

# முல்லைத்தீவில் யுவதி மாயம்!

முல்லைத்தீவு, ஒக. 08

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் -திருமுறிகண்டி வசந்த நகர் பகுதியில் யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

22 வயதான குறித்த யுவதி வீட்டில் இருந்து காணாமல் போனபோது சிவப்பு நிற சல்வார் அணிந்து சென்றிருக்கிறார்.

சிவகரன் ஜெயலக்சனா என்ற குறித்த யுவதி கடந்த 27.07.2022 அன்று முதல் காணாமல் போன நிலையில் பொலிஸ் முறைப்பாடு செய்தும் இதுவரை யுவதி கண்டு பிடிக்கப்படவில்லை.

எனவே, யுவதியை கண்டவர்கள்0760777615 , 0740961230 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# புலிகள் சார்ந்தோரின் கட்டுக்கதைகளை நம்பி படையினர் மீது நடவடிக்கை எடுக்கமுடியாது

## குற்றஞ்சாட்டுவதையும் ஐ. நா. நிறுத்தவேண்டுமாம் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 08

**"இலங்கை இராணுவத்தினர் போர் விதிகளை மதித்தே நடந்தார்கள். புலம்பெயர் புலிகள்சார் அமைப்புக்களின் கட்டுக்கதைகளை நம்பி ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது." - இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சிறீ லங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.**

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது மனித உரிமைகள் மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். அது தொடர்பில் செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வலியுறுத்தல் இலங்கை இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயலாகும். இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தும் நடவடிக்கையை ஐ. நா. உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஐ.நா. உறுப்புரிமை நாடுகளிடம் இலங்கை இராணுவ அதிகாரிகளைக் கைதுசெய்யுமாறு கோரவோ அல்லது பயணத்தடை விதிக்குமாறு கோரவோ மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணையாளரின் இந்த அறிவிப்புக்கு எதிராக அரசு கடும் கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டும்" - என்றார். (ஐ)

# இளைஞர்கள் உயிர் கடலுக்கு இரையாக்கப்படுவது உயர்வு

## ஐக்கிய தொழில்சங்க ஒன்றியம்

கொழும்பு, ஓக. 08

இளைஞர்களின் உயிர் கடலுக்கு இரையாக்கப்படுவது அதிகரித்து வருவதாகவும் கை, கால்கள் கட்டப் பட்ட நிலையில் சடலங்கள் கரையொதுங்குவது அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய தொழில்சங்க ஒன்றியத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், எவ்வித நிபந்தனைகளும் இன்றி பல்வேறு சிவில் அமைப்பு களுக்காக செயல்பட்ட மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக செயல்பட்ட, தொழில்சங்க உரிமை களுக்காக செயல்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளரான ஜோசப் ஸ்டாலினை மிலேச்சத்தனமாக கைதுசெய்ததை வன்மையாக கண்டிக்கின்றோம்.

நாட்டின் சட்டதிட்டங்களை மீறும் வகையிலேயே ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை கைதுசெய்து முன்னெடுக்கும் ஒடுக்குமுறைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின் றோம்.

ஜோசப் ஸடாலினை கைது செய்து இன்று முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறைகளை அரசாங்கமானது உடனடியாக கைவிட வேண்டும்.

கொழும்பு காலிமுகத்திடல் போரட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் கள் அங்கிருந்து வெளியேறியுள்ள சூழ் நிலையில் கரையோரப்பகுதிகளில் சடலங்கள் கரையொதுங்குவது தற்போது அதிகரித்து வருகின்றது.

இளைஞர்களின் உயிர்கள் கடலுக்கு இரையாக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் சாதாரணமாக கரை யொங்கிய சடலங்கள் தற்போது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கரையொதுங்குகின்றன.

அரசாங்கத்தின் இயலாமையின் பிரதிபலிப்பே ஒடுக்குமுறையாகும் - என்றார். (கே)

# அவசரகால சட்டத்தை உடன் நீக்க வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 08

நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, ஒடுக்குமுறை, மனித உரிமை மீறல்களுக்கு தாம் கடுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அவசரகால சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதை நாம் அறிவோம்.

கணித பாடத்தில் சித்திய டைவோரின் அடைவு மட்டம் வெகுவாகக் குறைவடைந்து வருகின்றது. நூற்றுக்கு 50 சத வீதமாக குறைவடைந்துள்ளது.

இரண்டு, மூன்று வருடங்களாக மாணவர்கள் முறையாக பாடசாலைக்கு செல்லவில்லையாயின் அந்த நூற்றில் 50 வீதமானோருக்கு என்ன நடக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். நூற்றுக்கு 75 சதவீதமாக இந்தத் தொகை அதிகரிக்கலாம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்னையை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, முதலில் பொருளாதார பிரச்னையை சீர்செய்ய வேண்டியது அவசியமாகும்.

மாணவர்கள் பாடசாலைக்கு முறையாக செல்ல வேண்டிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் வகையில் பொதுப்போக்குவரத்து சேவை முறையாக இயங்க வேண்டும்.

ரயில் பொதுப்போக்குவரத்தையும் அதிகரிக்க வேண்டும். நாட்டு மக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக மின்வெட்டு நடைமுறையால் மக்கள் சொல்லொனாத் துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வீட்டிலிருந்து வேலைசெய்யும் முறைமையானது சிறந்தது எனினும் அனைத்து தொழில்களையும் அவ்வாறு வீட்டிலிருந்து செய்ய முடியாது.

எனவே தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறான பிரச்னைகளால் மக்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். வேலைவாய்ப்புகள் இல்லாமல் போயுள்ளன. வருமான மார்க்கம் இல்லாமல் போயுள்ளது. மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காணப்படுகின்றது. சத்திரசிகிச்சைகள் பிற்போடப்பட்டு வருகின்றன. அவசர சத்திர சிகிச்சைகளைக் கூட செய்துகொள்ள முடியாமல் உள்ளது.

இவ்வாறான பிரச்னைகளுக்கு தீர்வை முன்வைக்காது நாட்டில் ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிடுவதை அரசாங்கம் முன்னெடுக்குமாயின் அதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

உடனடியாக அவசரகால சட்டத்தை நீக்குமாறே நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (ஐ)

# சட்டவிரோதமாக எரிபொருளை களஞ்சியப்படுத்திய நபர் கைது

கொழும்பு, ஓக. 08

களுத்துறை ஹொரணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓவிட்டியாகலை பிரதேசத்தில், சட்டவிரோதமாக எரிபொருளை களஞ்சியப் படுத்தி வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து வீடொன்றை சோதனையிட்ட பொலிஸார் அந்த வீட்டி லிருந்து 26 லீற்றர் பெற்றோல், 52 லீற்றர் டீசல் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# புதையல் தோண்டிய நால்வர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 08

அநுராதபுரம் - திரப்பன பொலிஸ் பிரிவில் விகாரை வளாகத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரதன்கடவல, கரபேகம, கல்கிரியாகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17, 60, 34 மற்றும் 37 வயதுகளையுடைய நால்வரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (கே)

# பொலிஸ் நிலையத்தில் வைத்து ஒருவர் கத்தியால் குத்தி கொலை!

கொழும்பு, ஓக. 08

பொலிஸ் நிலையத்தின் சிறு முறைப்பாட்டு பிரிவில் விசாரணை நடத்து கொண்டிருந்த போது, கத்திக்குத்துக்கு இலக்காகி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நபர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - நவகமுவ - கித்துல்கல பகுதியை சேர்ந்த ஜயந்த பெரேரா (42) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

முன்னாள் காதலி இவர் மீது முறைப்பாடு செய்திருந்தார். தனக்கு தொல்லை தருவதாக அவரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, முன்னாள் காதலியும், உயிரிழந்தவரும் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

முறைப்பாடு செய்த பெண், தனது தற்போதைய காதலனுடன் விசாரணைக்கு வந்திருந்தார். பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதன்போது, தற்போதைய காதலன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, பெண்ணின் முன்னாள் காதலனின் முதுகில் சரமாரியாக குத்தியுள்ளார். இதில், படுகாயடைந்த முன்னாள் காதலன் நவகமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ராமச்சந்திர குஹா

# உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் மௌனம் அவமானம்!



உக்ரைனுக்குள் ரஷ்ய ராணுவ டேங்குகள் நுழைந்து தாக்குதல் நடத்துவதும் உக்ரைனிய நகரங்கள் கிராமங்கள் மீது ரஷ்யப் போர் விமானங்கள் குண்டு வீசி அழிப்பதும் ஆரம்பித்து ஐந்து மாதங்கள் ஆகின்றன. இது மிகவும் கொடூரமான, ரத்த பலி கேட்கும் போர். இதுவரை சண்டையில் 20,000 ரஷ்யப் போர் வீரர்களும் அவர்களைப் போல இரண்டு மடங்கு உக்ரைன் வீரர்களும் இறந்துவிட்டனர். உக்ரைனைச் சேர்ந்த சிவிலியன்கள் ஆயிரக்கணக்கில் இறந்துள்ளனர். லட்சக்கணக்கானவர்கள் பாதுகாப்பான இடம் தேடி தங்களுடைய நாட்டை விட்டே ஓடி பிற நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துவிட்டனர்.

உக்ரைனின் பொருளாதாரம் நாசமாக்கப்படுகிறது. இந்த மோதல் முடிவுக்கு வந்தாலும்கூட, தன்னுடைய பழைய நிலைக்குத் திரும்ப உக்ரைனுக்கு இன்னும் பல பத்தாண்டுகள் தேவைப்படும். சாமானிய ரஷ்யர்களின் வாழ்க்கையும் அன்றாடப்பாடும்கூட துக்கப்படும் நிலைக்குச் சென்றுவிட்டன. மேற்கத்திய நாடுகள் எடுத்து வரும் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளாலும் அதிபர் புட்டினால் தொடங்கப்பட்ட போரின் விளைவாக ஏற்பட்டுள்ள வேலையிழப்பு, வருவாய் இழப்பு, அவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு உள்ளிட்ட இன்ன பிற செயல்களாலும் ரஷ்யர்களும் துயரங்களில் ஆழ்ந்துள்ளனர்.

### தொடரும் சித்திரவதை

ஒரு மனிதன் என்ற வகையில், ரஷ்ய ராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான செயல்களை அறிந்து அதிர்ச்சியில் உறைந்துவிட்டேன். எல்லா உக்ரைனிய நகரங்களின் அடித்தளக் கட்டமைப்புகளையும் திட்டமிட்டு அழிக்கின்றனர். மருத்துவமனைகள், மக்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற நம்பிக்கையில் தங்கியுள்ள நிலவறைகள் போன்றவற்றையும் கூட குண்டு வீசி தகர்க்கின்றனர். பெண்களைப் பாலியல் வல்லுறவு உள்பட எல்லா வகையிலான தாக்குதல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்குகின்றனர்.

இந்தியக் குடிமகன் என்ற வகையில், என்னுடைய அரசின் கோழைத்தனத்தைக் கண்டு திகைப்படைகிறேன். ரஷ்யாவின் படையெடுப்பைக் கண்டிக்காமலும் அவர்களுடைய அக்கிரமங்களைக் கண்டும் காணாமல் மௌனம் சாதிப்பதையும் கண்டு வருந்துகிறேன்.

கடந்த பிப்ரவரியில் உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தொடங்கிய மாதத்திலோ அல்லது அடுத்த மார்ச் மாதத்திலோ இந்தியா எந்த ஒரு முடிவையும் திட்டவட்டமாக எடுக்காமல், பொறுத்திருந்து பார்க்கலாம் என்று செயல்பட்டதை ஒரளவுக்கு அவசியம் என்றுகூட கருதலாம். இரு நாடுகளும் மோதலை விரைவிலேயே முடித்துக் கொண்டுவிடும் என்றுகூட பேசப்பட்டது. உக்ரைனில் மருத்துவம் படிக்கச் சென்ற ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்களைப் பாதுகாப்பாக மீட்டு இந்தியாவுக்குக் கூட்டி வருவதே அப்போது முன்னுரிமையாக இருந்தது.

மார்ச், பிறகு ஏப்ரல், பிறகு மே என்று போகப்போக ரஷ்யாவின் குரூரமான தாக்குதல்கள் அதிகமாகின. இதற்குப் பிறகும் இந்தியா நடுநிலை வகிப்பதை ஏற்க முடியாது. மேற்கத்திய நாடுகளின் தூண்டுதலால்தான் ரஷ்யா பதிலடியாக உக்ரைன் மீது தாக்குதல் தொடுத்தது என்ற வாதம் மிகவும் குறுகிய அடிப்படையைக் கொண்டது, உண்மையல்ல அது என்பது வெகு விரைவிலேயே வெளிப்படத் தொடங்கியது.

நேட்டோவில் உக்ரைன் சேர்ந்துவிடாமல் தடுக்க, இந்தத் தாக்குதலை புட்டின் எடுக்கவில்லை மாறாக தன் எண்ணத்துக்கேற்ப அடங்க மறுத்ததற்காக உக்ரைனியர்களைக் கடுமையாகத் தண்டிக்கவே இந் நடவடிக்கையை அவர் தொடர்கிறார். ரஷ்ய அதிபருக்கு சர்வாதிகார வெறி பிடித்திருக்கிறது. தன்னை வரலாற்றின் இடைக்கால சக்ரவர்த்தியாக நினைத்துக் கொண்டு, தன்னுடைய பக்கத்து நாடுகளையெல்லாம் ரஷ்யாவுடன் சேர்த்துக் கொண்டு மிகப் பெரிய உலகத் தலைவராக உருவெடுக்க முயல்கிறார்.

புட்டினும் அவருடைய ராணுவமும் தங்களுடைய கற்பனையான கனவுகளை நினைவாக்க - உக்ரைனியர்களுக்கு அல்லது ரஷ்யர்களுக்கேகூட கடுமையான சேதம் ஏற்பட்டாலும்



பரவாயில்லை - முயன்று பார்த்துவிடுவோம் என்று தாக்குதல்களைத் தீவிரப்படுத்திவருகின்றனர். (உக்ரைனிலிருந்து கோதுமையை ஏற்றுமதி செய்யலாம் என்ற உடன்படிக்கையில் கையெழுத்திட்டுவிட்டு ஒடசா பிரதேசத்தின் பெரிய துறைமுகத்தின் மீது குண்டுகளை வீசி, கடுமையாக சேதப்படுத்தியிருக்கிறது புட்டின் அரசு).

'உக்ரைனியர்கள்' என்பதே ரஷ்யர்களுக்கு இன்னொரு அடையாளம் என்று நம்புகிறார் புட்டின். எனவே, அவர்கள் அனைவரும் சொந்த தாய்நாட்டுடன்தான் இணைந்திருக்க வேண்டும் - அதற்காக ராணுவ பலத்தை முழுதாகப் பயன்படுத்துவதிலும் தவறில்லை என்று கருது கிறார். இந்த ஐந்து மாதப் போர் எதையாவது உணர்த்தியிருக்கிறது என்றால் அது உக்ரைனியர்களுக்குள்ள தேசிய உணர்வு வலுவானது என்பதைத் தான். தாங்கள் வித்தியாசமானவர்கள், தனித்துவம் மிக்கவர்கள், தங்களுடைய தேசிய அடையாளம் மறைந்துவிடாமல் காக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு முன்னால் ரஷ்யர்களுக்கும் தங்களுக்குமிருக்கும் கலாச்சார ஒற்றுமையையும் இரு நாட்டவர்களுக்குமுள்ள பரஸ்பர மொழிப் பழக்கத்தையும்கூட வெளிப்படையாகப் பேசிப் பெருமைப்பட்டனர். இப்போது அவையெல்லாம் பழங்கதையாகிவிட்டன. வீடுகளில் ரஷ்ய மொழியே பேசும் உக்ரைனியர்கள்கூட இனி ரஷ்யாவுடன் அரசியல்ரீதியாக இணைந்து வாழ்வதை நினைத்துக் கூடப் பார்க்கத் தயாரில்லை.

ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனியர்கள் வெளிப்படுத்தும் தேசிய உணர்வு, ஒருகாலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிய மறுத்த வியட்நாமியர்களின் தேசிய உணர்வை அப்படியே பிரதிபலிக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தி சுதந்திரம் பெற்ற இந்தியா, அமெரிக்காவை எதிர்த்த வியட்நாமைத்தான் ஆதரித்தது என்பதை இந்திய அரசு நினைவுகூர்வது புத்திசாலித்தனமாகக்கூட அமையும். வியட்நாமியர்கள் முதலில் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்தும் பிறகு அமெரிக்கர்களின் மேலாதிக்கத்திலிருந்தும் விடுதலைக்காகப் போராடினார்கள்.

அமெரிக்காவிடமிருந்து பொருளாதார - ராணுவ உதவிகளுக்காக அண்டியிருந்த 1960களில்கூட, 'வியட்நாம் விவகாரத்தில் அமெரிக்கா செய்வது தார்மிகரீதியாக தவறு, அரசியல்ரீதியாக புத்திசாலித்தனமற்றது' என்று சுட்டிக்காட்டத் தவறவில்லை இந்தியா. அமெரிக்காவிடமிருந்து கோதுமை, பால் பவுடர் உள்ளிட்ட பொருளாதார உதவியை மிகவும் நம்பியிருந்த அந்தக் காலத்தில்கூட அதன் தவறைச் சுட்டிக்காட்ட இந்தியா தயங்கவில்லை.

இதுவரையில் நாம் உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்காமலேயே இருக்கிறோம், அதன் காரணமாக உக்ரைனில் புடின் நிகழ்த்தும் அக்கிரமங்களுக்கு உடந்தையாக இருக்கிறோம் என்றுகூட கருதப்படும்.

### இந்தியா எங்கே?

உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் நிலை குறித்து திருப்தியைத் தராத விளக்கங்கள் பல கூறப்படக் கூடும். ரஷ்யாவின் ஆயுதங்களையும் ராணுவ உதவிகளையும் பெருமளவுக்கு நம்பியிருப்பதால் அவர்களைக் கண்டிக்க முடியாமலிருக்கிறது என்று கூறப்படுகிறது. உக்ரைனியர்களுக்குத் தனி சுதந்திர நாடாக இருக்கும் உரிமை இருக்கிறது என்று நாம் சொன்னால், நாளையே காஷ்மீர் மக்களுக்கும் நாகாலாந்தின் நாகர்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது என்று மற்றவர்கள் கூறிவிடுவார்கள் என்று ஒன்றிய அரசை ஆளும் பாஜகவின் தலைவர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இன்னும் சிலர், சர்வதேசச் சந்தையில் கச்சா பெட்ரோலியத்தின் விலை கடுமையாக உயர்வதால் இந்தியாவில் அவற்றின் விலை உயர்வதையும் பண வீக்கம் அதிகரிப்பதையும் கட்டுப்படுத்த ரஷ்யாவிடமிருந்து கச்சா பெட்ரோலிய எண்ணெயை வாங்க முடிகிறது என்பதால் இந்தியா கண்டிக்காமல் இருப்பதாகக் கூறுகின்றனர். சர்வதேச புவி அரசியலில் நல்ல அனுபவம் இல்லாததால் பிரதமர் மோடி தெளிவாக முடிவெடுக்க முடியாமல் குழம்புகிறார். எனவே, இந்தியாவால் இதில் சரியான முடிவை எடுக்க முடியாமல் இருக்கிறது.

காரணங்கள் எதுவாக இருந்தாலும், இந்திய அரசின் நிலை - அல்லது எந்த நிலையையும் எடுக்க முடியாத நிலை, தார்மிகரீதியாக ஏற்க முடியாததாக இருக்கிறது, அரசியல்ரீதியாக செயல்திறமற்றதாகத் தெரிகிறது. நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், கிருஷ்ண மேனனை அடியொற்றிப் பேசுகிறார். ரஷ்யாவிடம் இயற்கை எரிவாயுவைத் தொடர்ந்து வாங்கிக்கொண்டே, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கலாமா என்று இந்தியாவைப் பார்த்து, ஐரோப்பிய நாடுகள் ஆஷாடபூதிகளைப் போல கேட்கின்றன என்று சாடுகிறார்.

ஐரோப்பிய நாடுகள் சந்தர்ப்பவாதம் பேசுவது செய்தியல்ல, நாடு சுதந்திரமடைந்த 75வது ஆண்டைப் பெரிய விழாவாகக் கொண்டாடிக் கொண்டு, அப்படிப்பட்ட சுதந்திரத்தை இழக்க விரும்பாத உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவைக் கண்டிக்காத இந்திய நிலைதான் சந்தர்ப்பவாதம். சுதந்திரம் பெறுவதற்காக இந்தியா எதிர்த்த ஏகாதிபத்தியம் மறைந்துவிடவில்லை, இன்றைக்கு உக்ரைன் மீது தாக்குதல் தொடுத்த ரஷ்யாவின் வடிவில் அது வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

இழப்புகள் அதிகமாகிவரும் நிலையிலும் அடிபணிந்து விடாமல் ரஷ்யாவைத் தொடர்ந்து எதிர்க்கும் உக்ரைனியர்களின் தீரத்தை ஆதரித்தாக வேண்டிய தார்மிக கடப்பாடு இந்திய அரசுக்கு இருக்கிறது. அரசியல்ரீதியிலும் இதற்குத் தேவையிருக்கிறது. நம்முடைய பொருளாதார வலிமை, மக்கள்தொகை, ராணுவத்தின் அளவு - ஆற்றல், இன்னும் பிற அம்சங்கள் காரணமாக உலக அரங்கில் இந்தியா சொல்வது கவனமுடன் கேட்கப்படுகிறது.



# இலங்கை துறைமுகத்துக்கு சீன கப்பல் வருகை தள்ளிவைப்பு

## இந்தியாவின் அழுத்தம் காரணமா?

**சீ**னாவின் செயற்கைக்கோள் கண்காணிப்புக் கப்பலான “யுவான் வாங் 5” இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதை தள்ளிவைக்குமாறு சீனாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

“யுவான் வாங் 5“ என்பது, சீன விண்வெளி-செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலாகும். இலங்கை துறைமுகத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக இந்த கப்பல் ஆகஸ்ட் 11ஆம் திகதி வரலாம் என்று உத்தேசிக்கப்பட்டு இருந்தது.



2007ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த கப்பல், அது நிலைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து 750 கிமீ தூரம் கொண்ட பகுதிகளை கண்காணிக்கவும் பரந்த வான் வழி நோக்குடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவுவதற்கும் பயன்படுத்தலாம் என்று பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகிறார்கள். அந்த வகையில் இந்த கப்பல் இலங்கைக்கு வருவது, அதன் அண்டை நாடான இந்தியாவுக்கு பாதுகாப்பு ரீதியிலான அச்சுறுத்தலாகும் என இந்தியாவில் உள்ள பாதுகாப்பு ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.

இந்த நிலையிலேயே, சீன அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தும் வரை அந்த கண்காணிப்பு கப்பலின் வருகையை தள்ளிவைக்குமாறு இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த விவகாரத்தில் ஏற்கெனவே இந்தியா அரசாங்கம் அதன் கவலையை இலங்கையிடம் தெரிவித்திருந்தது. மேலும், இலங்கை பொருளாதார நெருக்கடியில் தற்போது சிக்கியிருக்கும் சூழலில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஏற்கனவே சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட் டிருக்கிறது.

ஹம்பாந்தோட்டையில் நடைமுறை யில் எந்த பொருளாதார நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

### எச்சரிக்கை விடுத்த இந்தியா, அமெரிக்கா

முன்னதாக, சீன கப்பல் ஹம்பாந்தோட்டைக்கு வரும் நடவடிக்கையை நியாயப்படுத்தும் வகையில் இலங்கை அரசு கருத்து வெளியிட்டது. ஆகஸ்ட் 11 ஆம் திகதி ஹம்பாந்தோட்டைக்கு வரும் சீன கப்பல் பராமரிப்புப் பணிகளை நிறைவு செய்து கொண்டு, ஆகஸ்ட் 17ஆம் திதி தனதுஅதன் பயணத்தைத் தொடரும் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது.

இதையடுத்து இந்த வார தொடக்கத்தில், இந்தியாவின் தென் மாநிலமான தமிழ்நாடு காவல்துறை அதன் எல்லைக்குட்பட்ட கடலோர பாதுகாப்பை பலப்படுத்தியது. சர்வதேச கடல் எல்லை பகுதியில் இந்திய கடற்படையும் இந்திய கடலோர காவல் படையும் ரோந்து மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்தின.



இதேவேளை, சீன கப்பலின் ஹம்பாந்தோட்டை வருகை, இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகலாம் என்று இந்திய உளவு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு இலங்கைக்கு எச்சரிக்கை குறிப்பை அனுப்பியது.

“இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை கவனத்தில் கொண்டு” இந்த விவகாரத்தை மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதாகவும் வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள இந்திய தூதரக பணியுடன் இணைக்கப்பட்டுள்ள இந்திய ராணுவ லெப்டிணன்ட் கர்னல் புனீத் சுஷீல் மற்றும் அதிகாரிகள், இந்திய துணைத்தூதர் திபின் தலைமையில் ஹம்பந்தோட்டா துறைமுக அதிகாரிகளையும் இலங்கை கடற்படை தென் பிராந்திய தளபதி மற்றும் ராணுவ உயரதிகாரிகளை சந்தித்துப் பேசினார்கள். அப்போதும் இந்தியாவின் கவலை இலங்கை தரப்பிடம் பதிவு செய்யப்பட்டது.

இதேபோல, “யுவான் வாங் 5” கப்பல் சீனா ராணுவத்தின் (பிஎல்ஏ) ஆதரவு அமைப்பால் இயக்கப்படுவதாக அமெரிக்க பாதுகாப்புத்துறையான பென்டகனும் கூறியது.



இந்த அழுத்தங்கள் காரணமாகவே, ஆகஸ்ட் 5 ஆம் திகதி வாய்மொழி குறிப்பு மூலமும் பின்னர் எழுத்து பூர்வமாகவும் இந்த பிரச்னையில் மேலதிக ஆலோ சனைகள் செய்யப்படும் வரை, யுவான் வாங் 5 கப்ப லின் வருகை திகதியை தள்ளிவைக்குமாறு சீனாவிடம் இலங்கை வெளியுறவுத்துறை கோரியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

### யுவான் வாங் 5 - ஏன் அச்சப்பட வேண்டும்?

ஆராய்ச்சி பணிக்காக வடிவமைக்கப்பட்ட யுவான் வாங் 5 கப்பல், 2007இல் கட்டப்பட்டது. 11 ஆயிரம் தொன்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த கப்பல், ஜூலை 13ஆம் திகதி சீனாவின் ஜியாங்யினில் இருந்து புறப்பட்டது. தற்போது தாய்வானுக்கு அருகே இந்த கப்பல் பயணம் செய்து வருகிறது.



ஏற்கெனவே தாய்வானுக்கு அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசி, சில தினங்களுக்கு முன்பு சீன தடையை மீறி பயணம் செய்தார். அப்போது தாய்வானை அச்சுறுத்தும் விதமாக இதே கப்பலை தாய்வான் கடல் பகுதி நோக்கிப் பயணம் செய்ய வைத்தது சீனா.

அந்த கடல் பகுதியில் சீனா அதன் வான் படை மற்றும் கடற்படை, ராணுவ கூட்டு ஒத்திகையை கடந்த இரு தினங்களாக நடத்திய விவகாரம் சர்ச்சையானது. மரைன் டிராபிக் வலைதள தரவுகளின்படி, யுவான் வாங் 5 கப்பல், தற்போது கிழக்கு சீன கடலில் தெற்கு ஜப்பான் மற்றும் தாய்வானின் வடகிழக்கு இடையே உள்ளது. சீன கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியமான கடல் படுகை வரைபடத்தை தயாரிக்க இந்த யுவான் வாங் 5-ஆல் முடியும். ஆனால், தரவுகள் அடிப்படையில் ஒரு ஆராய்ச்சிக் கப்பலாக இது காட்டப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதனாலேயே ஹம்பாந்தோட்டையில் சீன கப்பல் நிறுத்தப்படுவது இந்தியாவுக்கு பாதுகாப்பு ரீதியிலான அச்சுறுத்தலாக அமையலாம் என்ற கவலை நிலவுகிறது.

இந்த கப்பல் ஹம்பாந்தோட்டைக்கு வர அனுமதி மறுக்கப்பட்டால் அது இலங்கையுடனான சீன உறவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று சில தினங்களுக்கு முன்பு இலங்கைக்கான சீன தூதர் கூறியிருந்தார். இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளர் கர்னல் நளின் ஹேரத், சீன கப்பலுக்கு எரிபொருள் நிரப்ப மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

### இந்தியாவின் கவலைகள்

யுவான் வாங் 5 கப்பல், சீன தேசிய விண்வெளி நிர்வாகத்தால் கட்டுப்படுத்தப் படுகிறது. ஆனால் மிகவும் குறிப்பிடத்தக்க ராணுவ பயன்பாட்டு வசதிகளை இந்த கப்பல் கொண்டுள்ளது.

இந்த கப்பல் மலாக்காவின் பரபரப்பான நீரிணையைத் தவிர்த்து மற்ற இந்தோனீசிய ஜலசந்தி வழியாக இந்திய பெருங்கடலில் நுழைய திட்டமிடப்பட்டது.

யுவான் வாங் 5 சீன கப்பல், இந்திய பெருங்கடலின் சில பகுதிகளில் நிறுத்தப்பட்டால், ஒடிஷா கடற்கரையில் உள்ள வீலர் தீவில் இருந்து இந்தியாவின் ஏவுகணை சோதனைகளை இந்தக் கப்பலால் கண்காணிக்க முடியும்.

இந்தியாவின் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளை கண்காணிப்பதன் மூலம், ஏவுகணைகளின் செயல்திறன் மற்றும் அவற்றின் துல்லியமான ஆற்றல் பற்றிய தகவல்களை சீனாவால் சேகரிக்க முடியும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக சீனாவுக்கு பெரும் தொகையை செலுத்த வேண்டிய இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதை இந்தியா சந்தேக கண்ணோட்டத்துடனேயே அணுகி வருகிறது.

அந்த நாட்டில் கிழக்கு-மேற்கு சர்வதேச கப்பல் பாதைகளில் அமைந்துள்ள துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு இலங்கை 2017இல் வழங்கியது. இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் இலங்கை தனது 51 பில்லியன் டாலர் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை. இதனால், இலங்கையில் உள்ள துறைமுக வசதிகளை அனுபவிக்கும் வகையில் தமது செல்வாக்கை இலங்கை மீது செலுத்த இந்த கப்பல் பயணத்தை சீனா வாய்ப்பாக பயன்படுத்தலாம் என இந்தியா கருதுகிறது.


இதற்கு முன்பு, 2014ஆம் ஆண் டில், சீன நீர்மூழ்கிக் கப்பல் மற் றும் போர்க்கப் பல் இலங்கை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டன. அப்போதும் இந்தியா அந்த கப்பல்கள் குறித்த தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டது. அதன் பின்னர் இலங்கை துறைமுகங்க ளுக்கு சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் வருகை எதுவும் பதிவாகவில்லை.


(பிபிசி)

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1) 2) 3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37.** 1 **38.** 2 **39.** 1 **40.** 2

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### CHANNEL-1 — 08.08.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### CHANNEL - 2 — 08.08.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்கக்கூடாது

## அதாவுல்லா எம். பி. சொல்கிறார்



**அக்கரைப்பற்று, ஒக. 08**

**"சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அரசமைப்பூடாக உறுதிப்படுத்தப்படும் வரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது."**

- இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது: -

"புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது: -

பாராட்டுக்குரியது. நாட்டில், ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ஸ்திரம் அவசியம். இந்த ஸ்திரத்தை உருவாக்கும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்.

எந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அதில் உறுதி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உறுதி செய்யப்படும் வரை, நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படக்கூடாது.

பட்டம், பணம் மற்றும் பதவிகளுக்காகச் சோரம் போகும் எம்.பிக்கள் இருக்கும் வரைக்கும், நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த முடியாது. இதனால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தை எமது கட்சி வலியுறுத்துகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைகள் முறைமை எமது நாட்டுக்குத் தேவையில்லை.

சின்னஞ் சிறிய நாட்டை ஒன்பதாகப் பிரித்து நிர்வாகம் நடத்துவதால் செலவுகளே அதிகம். ஏதாவது நாடுகளின் அழுத்தங்களுக்காக இந்த மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டிருந்தால், அந்த நாட்டுக்கு எமது நாட்டின் நிலை குறித்து அரசு தெளிவுபடுத்தல் அவசியம்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதால் பிரிவினை சிந்தனைகள் பலமிழந்துள்ளன.

சகல இனங்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் புதிய கலாசாரத்தை காலிமுகத்திடலில் காணக்கிடைக்கின்றது. எனவே, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது போன்று இனவாதமும் ஒழிக்கப்படல் அவசியம். இதை ஒழிக்கும் வகையிலான புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதுதான் சிறந்தது" - என்றார். (ஐ)

# மீண்டும் திருமலை - கொழும்பு இரவுநேர தபால் ரயில் சேவை!

திருகோணமலை, ஒக. 08

கொரோனா தொற்றுப் பரவலால் இடைநிறுத்தப்பட்டிருந்த திருகோணமலை - கொழும்பு இரவு நேர தபால் ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

கொரோனா தொற்று பரவலால் இந்த ரயில் சேவை கல் ஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

எனவே, திருகோணமலையில் இருந்து வரும் பயணிகள் மட்டக்களப்பில் இருந்து வரும் இரவு நேர தபால் ரயிலுக்கு மாற்ற வேண்டியிருந்தது.

பயணிகளின் கடும் கோரிக்கையை ஏற்று மீண்டும் புகையிரதத்தை இயக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ)

# அதிக விலைக்கு விற்பனை செய்தால் முறையிடலாம்!

## அக்கரைப்பற்று மாநகர சபை

அக்கரைப்பற்று, ஒக. 08

அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குள் கடந்த சில நாட்களாக அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த விமர்சனங்களை கருத்தில் கொண்டு, மாட்டிறைச்சி விற்பனையாளர்களுடனான சந்திப்பு மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சகி தலைமையில் மாநகர சபையில் இடம்பெற்றது.

இதில் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக வந்த குற்றச்சாட்டை விற்பனையாளர்கள் முற்றாக மறுத்தனர்.

மேலும், ஒரு கிலோ இறைச்சி (இறைச்சி 800g,முள்ளு 200g) 1600/- ரூபாய்க்கும், தனி இறைச்சி 1800/- ரூபாய்க்கும் தொடர்ந்தும் விற்பனை செய்வதாகவும் உறுதியாக கூறினர்.

இருந்தாலும், ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்க வாய்ப்பிருக்கலாம் என்பதையும், பொருளாதார நெருக்கடி நிலையையும் கருத்தில் கொண்டு மாநகர மக்களின் நலனுக்காக தொடர்ந்தும் மாநகர சபை இவ்விடயத்தில் மிகவும் கண்காணிப்புடன் நடந்து கொள்ளும் என்பதை மாநகர மக்களுக்கு அறிய தருகின்றது.

அவ்வாறு, கூடிய விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதை அறிந்தால் 067 22 77 275 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கலாம் என அக்கரைப்பற்று மாநகர சபை மக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# இந்திய நடிகர் நாசர் திருமலை வருகை!

திருகோணமலை, ஒக. 08

திருகோணமலை மூதூர் சேனையூரில் பேராசிரியர் பால சுகுமாரனின் மகள் அனாமிகா நினைவாக அமைக்கப்பட்ட "அனாமிகா களரி பண்பாட்டு அமையத்தின்" திறப்பு விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் கிழக்குப பல்லைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் மற்றும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் சி.மௌனகுரு பேராசிரியர் ச.மனோன்மணி உற்பட பல பேராசிரியர்களும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் மற்றும் கிழக்கு மாகாண கலாச்சார திணைக்கள பணிப்பாளர் சு.சரண்யா உட்பட பல அதிதிகள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். (ஐ)

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்

# சமூகம் சார்ந்த உத்தரவாதங்களை முஸ்லிம் கட்சிகள் பெறவேண்டும்!

## கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி

அக்கரைப்பற்று, ஒக. 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டு, அமையப்போகும் சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டுமென கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயத்தை வலியுறுத்தி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்த வரை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லா, ஜனாதிபதி ரணிலை சந்தித்து, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற் கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், அமைச்சுப் பதவி தவிர்ந்த, சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர் ஏதாவது பேசினாரா என்பது பற்றி அறியக்கிடைக்கவில்லை.

இதேவேளை சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தாம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என்ற ரீதியில் இதுவரை ஜனாதிபதியை சந்தித்து எதுவும் பேசவில்லை.

"சர்வகட்சி அரசாங்க விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் ஷூறா சபை, உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட தேசிய ரீதியிலான சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளையாவது பெற்று செயற்படலாம்.

"இனியும் தாமதியாமல் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, ஜனாதிபதியால் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் பேச முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் வேண்டும்" என்றார்.

# கிழக்கு மாகாண ஆளுநராக தமிழ் பேசுபவரை நியமிக்குக!

## அரச பொது ஊழியர் சங்கம்

மட்டக்களப்பு, ஒக. 08

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் ஒருவர் கிழக்கின் ஆளுநராக நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளதாக, இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அவர் கூறினார்.

அந்தக் கடிதத்தில், "வெளி மாகாணங்களை சேர்ந்த எவரும் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டாம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில் மூவின மக்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

"மூவின மக்களும் வாழும் இம் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் பொருத்தமானவராக இருப்பார். வெளி மாகாணங்களை சேர்ந்தவர்களே கிழக்கின் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு வருகின்றார்கள்.

எமது மாகாணத்தை சேர்ந்த பொருத்தமான ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

"எனவே, கிழக்கு மாகாண ஆளுநரை நியமிப்பதற்கு பரிந்துரை செய்யும் போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை ஆளுநராக நியமிக்கவும்" என்றுள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கிண்ணியா, ஒக. 08

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுவூற்று பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர், திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபர்களிடம் இருந்து 3.73 கிராம் நிறையுடைய ஹெரோயின் பொதி கைப்பற்றப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறிஞ்சாக்கேணி, நடுவூற்று பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தாய்வான் - சீனா இடையே அதிகரிக்கும் போர் பதற்றம்!

## இரு நாடுகளும் தலா 10 போர் கப்பல்களை நிறுத்தின

**தைபே,ஓக.08**

**தாய்வான் நீரிணையில் சீனாவையும் தாய்வானையும் பிரிக்கும் அதிகார பூர்வமற்ற எல்லைக் கோட்டுக்கு அருகே மிக நெருக்கமாக சுமார் 10 சீன மற்றும் தாய்வான் போர் கப்பல்கள் நேற்றுக் காலை நிறுத்தப்பட்டுள்ளன என்று ஆதாரங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.**



சீனாவின் போர்க் கப்பல்கள் தாய்வான் எல்லைக் கோட்டுக்கு அருகே நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தாய்வான் போர் கப்பல்களும் அதன் நடவடிக்கைகளை கண் காணிக்க அருகிலேயே நங்கூர மிட்டு உள்ளன.

சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி தாய்வானுக்கு அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி வருகை தந்தமையைக் கண்டிக்கும் வகையில் தாய்வானை சுற்றி சீனா போர்ப் பயிற்சி மேற் கொண்டு வருகிறது.

வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்தப் போர்ப் பயிற்சி தொடர்ந்து 5 நாட்கள் இடம்பெறும் என சீனா தெரிவித்துள்ளது.

இதனால் சீனா - தாய்வான் இடையே பதற்ற நிலை நீடித்து வருகிறது.

இதேவேளை, அருகருகே சீனா - தாய்வான் போர்க் கப்பல்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நிலைகொண்டுள்ள போதும் இரு தரப்பும் இதுவரை நிதானத்தைக் கடைப்பிடித்து வருவதாக பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

*சர்ச்சையான ஐஸ்கிறீம் விளம்பரம்:*

# பெண்கள் விளம்பரங்களில் நடிப்பதற்கு ஈரானில் தடை!



தெஹ்ரான், ஓக. 08

விளம்பரங்களில் பெண் கள் நடிக்க தடை விதித் துள்ளது ஈரான் அரசாங் கம். ஐஸ்கிறீம் விளம்பர படம் ஒன்றில் பெண் ஒருவர் நடித்திருந்தார். அது சர்ச்சையான நிலை யில் இந்த உத்தரவை அந்த நாட்டு அரசு பிறப் பித்துள்ளது.

அந்த விளம்பரப் படத்தில் பெண் ஒருவர் ஹிஜாபை தளர்த்திய நிலையில் நடித்திருந்தார். அது மத ரீதியிலான நம்பிக் கையை குலைக்கும் வகையில் இருந்ததாக ஈரான் நாட்டின் இஸ்லாமிய தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து ஈரானின் கலாசார மற்றும் இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சு இந்த தடையை விதித்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப் பட்ட அமைச்சின் சார்பில் விளம் பரப் பட நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள் ளது. அதிலேயே இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் மதிப்புகளை அவமதிக்கும் வகையில் இது இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரசின் இந்த நடவடிக்கை ஹிஜாப் விவகாரத்தை சார்ந்து இருப்ப தாகவும் கருத்துகள் அங்கு நிலவுகின்றன.

கடந்த 1979 முதல் ஈரானில் ஹிஜாப் அணிவது கட்டாயமா கும். இருந்தும் இதற்கு பெண் கள் சிலர் பல்வேறு காலகட் டங்களில் எதிர்ப்பு தெரிவித் துள்ளனர். இதன் காரணமாக அவர்கள் கைது நடவடிக்கைக் கும் ஆளாகியுள்ளனர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு நால்வர் பலி; பலர் படுகாயம்!

நியூயோர்க், ஓக. 08

அமெரிக்காவில் ஓஹியோ நகரில் நடந்த துப்பாக்கிச் சூட் டில் 4 பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர். பலர் காயமடைந்த னர்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடு பட்ட நபராக கருதப்படும் ஸ்டீ பன் மார்லோவை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். அமெரிக்க புலனாய்வு அமைப்பு (எவ். பி. ஐ. ) அதிகாரிகள் விசா ரணை மேற்கொண்டு வருவ தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நபர் கண்மூடித்தன மாக பொதுமக்களை சுட்டு விட்டு வெள்ளை நிறக் காரில் தப்பி சென்றார் என்று பொலி ஸார் கூறினர்.

அமெரிக்காவின் டாய்டன் நகருக்கு அருகில் அமைந்துள்ள சிறிய நகரமான பட்லர் டவுன் ஷிப்பில் சுமார் 8000 பேர் வசித்து வருகின்றனர். அந்தப் பகுதியில் மர்ம நபர் துப்பாக் கிச்சூடு நட்த்தி விட்டு தப்பிச் சென்ற சம்பவம் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்காவில் ஆண்டுக்கு 40,000 மரணங்கள் துப்பாக்கிச் சூடு போன்ற மரணங்களால் நிகழ்கின்றன. அண்மைக்கால மாக இந்த துப்பாக்கிச் சூடு வன்முறை அதிகரித்துள்ளது.

# உக்ரைன் அறிக்கை விவகாரம் மன்னிப்பு சபை தலைவர் விலகல்!

கீவ், ஓக. 08

உக்ரைனில் பொதுமக்களை அந்த நாட்டு இரா ணுவம் மனிதக் கேடயங்களாக பயன்படுத் துவதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப் பான மன்னிப்பு சபை அண்மையில் வெளி யிட்ட அறிக்கை தொடர்பாக எழுந்த சர்ச்சை யில், அந்த அமைப்புக்கான உக்ரைன் பிரிவு தலைவர் ஒக் சானா போகல்சுக் இராஜிநாமா செய்துள்ளார்.

அவரின் எதிர்ப்பை மீறி அந்த அறிக்கை வியாழக்கிழமை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் முகநூலில் வெள்ளிக் கிழமை வெளியிட்டுள்ள பதிவில், ரஷ்யாவுட னான போரில் உக்ரைனுக்கு பின்னடைவை ஏற் படுத்தும் வகையில் மன்னிப்பு சபையின் அறிக்கை அமைந்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

முன்னதாக, பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் உக்ரைன் இராணுவம் நிலைகளை அமைத்து வருகிறது. இதனால் அந்த நிலைகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவதில் பொதுமக் கள் உயிரிழக்கின்றனர் என்று மன்னிப்பு சபை யின் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மிகவும் பரபரப்பை ஏற்படுத்தி அந்த அறிக் கையின் விவரங்களை உக்ரைன் இராணுவம் மறுத்துள்ளது.

# காசாவில் இஸ்ரேல் தாக்குதல் 6 சிறுவர்கள் உட்பட 24 பேர் பலி!

## பலஸ்தீன ஜிகாத் தளபதியும் மரணம்



காசா, ஓக. 08

காசா பகுதியில் இஸ் ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களில் இது வரை 6 பலஸ்தீன சிறுவர் கள் உட்பட 24 பேர் கொல் லப்பட்டனர். 200இற்கும் மேற்பட்டவர்கள் காயம டைந்துள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேல் வெள்ளிக்கிழமை முதல் தாக்குதல் நடத்தி வருகிறது. வெள்ளிக்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் உயர்மட்ட தளபதி தய்சீர் ஜபரி உட்பட குறைந்தது 10 பேர் கொல்லப்பட் டனர். மேலும் 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரண்டா வது நாளாகவும் காசா பகுதிகள் மீது இஸ்ரேல் உக்கிர தாக்குதல்களை நடத்தியது. இதில், உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித் துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு பலஸ்தீன போராளிகளும் பதில் தாக்குதல் தொடுத்துள்ளனர். வெள்ளிக்கிழமை முதல் பலஸ்தீன பகுதிகளில் இருந்து சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் மோட்டர்கள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் உட னடி அச்சுறுத்தல் காரண மாக அந்த அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் நிலைகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 மே மாதம் இஸ்ரேல் - பலஸ் தீனம் இடையே வெடித்த மோதல் 11 நாட்கள் நீடித்தது. இந்த மோதலில் 200இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் மற்றும் ஒரு டசின் இஸ்ரேலி யர்கள் கொல்லப்பட்ட பின்னர் வெடித்த மிகப் பெரிய மோதலாக இது அமைந்துள்ளது.

பிரேக்கிங் டவுன் (Breaking Dawn) என்று பெயரிடப்பட்ட இந்த சமீபத்திய நடவடிக்கை ஒரு வாரம் நீடிக்கும் என இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது. (ஐ)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு 8 பேர் மரணம்; 22 பேர் காயம்!



காபூல், ஓக. 08

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் வணிக வளாகங்கள் அமைந்துள்ள தெரு வில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற குண்டுவெடிப் பில் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமடைந்த னர் என்று மருத்துவ மனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறுபான்மை ஷியா முஸ் லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் அதிகளவில் ஒன்று கூடும் நக ரின் மேற்கு மாவட்டத்தில் குண்டு வெடித்தது. சன்னி முஸ்லிம் போராளிக் குழுவான ஐ. எஸ். தீவிரவாத அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு பொறுப் பேற்றுள்ளது.

ஐ. எஸ். தீவிரவாத அமைப்பு ஆப்கானிஸ்தானில் எந்தப் பகு தியையும் கட்டுப்படுத்தவில்லை. ஆனால், அது நாட்டில் உள்ள மத சிறுபான்மையினரை குறி வைத்து தொடர்ந்து தாக்கு தல்களை நடத்தி வருகிறது.

இரண்டு தசாப்த கால கிளர்ச்சிக்குப் பிறகு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கா னிஸ்தானை கைப்பற்றிய சன்னி முஸ்லிம் தலிபான் அதிகாரி கள், ஷியா மசூதிகள் மற்றும் பிற வசதிகளுக்கு கூடுதல் பாது காப்பை வழங்குவதாக உறுதி யளித்தனர்.

எனினும் அங்கு தொடர்ந்து ஷியா முஸ்லிம்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டு வருகின் றமையும் படுகொலை செய்யப் படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா!




புளோரிடா, ஓக. 08

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக இருபது - 20 தொடரை கைப்பற்றியுள்ளது இந்திய கிரிக்கெட் அணி.

இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் இடையேயான 4ஆவது இருபது -20 போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்கள் எடுத்தது. கடந்த போட்டியில் காயத்தால் வெளியேறிய அணித் தலைவர் ரோஹித் சர்மா இந்தப் போட்டியில் களமிறங்கினார்.

அவருடன் வழக்கம் போல சூர்யகுமார் யாதவ் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் பவர் பிளே ஓவர்களில் அதிரடி காட்டினர். எனினும், 4.4வது ஓவரிலேயே 33 ஓட்டங்களுடன் ரோஹித் சர்மா முதல் விக்கெட்டாக நடையை கட்டினார்.

அடுத்த ஓவரிலேயே சூர்யகுமார் யாதவும் 24 ரன்களில் அவுட் ஆகினார். இந்தப் போட்டியில் ஹார்திக் பாண்ட்யாவுக்கு பதிலாக வாய்ப்புப் பெற்ற தீபக் ஹூடா 21 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ரிஷப் பந்த் நிதானமாக ஆடி 44 ஓட்டங்கள் குவித்தார். இறுதிக்கட்டத்தில் சஞ்சு சாம்சன் 30 ஓட்டங்களும், அக்சர் படேல் 20 ஓட்டங்களும் எடுத்தனர்.

192 ஓட்டங்கள் இலக்கை துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிராண்டன் கிங் இனிங்ஸை அதிரடியாக தொடங்கினாலும் அவர் நீடிக்க தவறினார். அவரை ஆவேஷ் கான் வெளியேற்றினார். அவரைத் தொடர்ந்து வந்தவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். இந்திய பந்துவீச்சாளர்கள் இரண்டு ஓவர்களுக்கு ஒரு விக்கெட் என்னும் கணக்கில் சீரான இடைவெளியில் மேற்கிந்திய தீவுகளின் துடுப்பாட்ட வீரர்களை வெளியேற்றினர்.

இதனால் 19.1 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்களையும் இழந்த மேற்கிந்தியத் தீவுகள் 132 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக பூரண், பவல் இருவரும் தலா 24 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

இந்திய அணி அணி தரப்பில் அதிகபட்சமாக அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். ஆவேஷ் கான், ரவி பிஷ்னோய், அக்சர் பட்டேல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதன்மூலம் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரையும் 3 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தொடர்ச்சியாக இந்திய அணி கைப்பற்றியிருக்கும் ஐந்தாவது இருபது -20 தொடர் இதுவாகும். அதேபோல் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக தொடர்ச்சியாக, 13ஆவது முறையாக தொடரை (ஒருநாள், டெஸ்ட், மற்றும் இருபது -20) வெற்றியாகும். (ஐ)

# பொதுநலவாய கிரிக்கெட் இறுதியில் இந்திய அணி!



பர்மிங்ஹாம், ஓக. 08

பலமான இங்கிலாந்து அணியை 4 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்று பொதுநலவாய கிரிக்கெட்டின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்திய மகளிர் அணி.

எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் நடந்த அரையிறுதியில் இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை முதலில் தொடங்கிய இந்திய அணிக்கு ஷெபாலி வர்மா, ஸ்மிருதி மந்தனா இணை சிறப்பான ஆரம்பம் கொடுத்தது.

ஸ்மிருதி மந்தனா ஒருபுறம் அதிரடியாக ஓட்டங்களை குவிக்க, 10 என்ற சராசரியில் ஓட்டங்களை சேர்ந்தது. ஸ்மிருதிக்கு பக்கபலமாக ரோட்ரிக்ஸ் சேர்ந்துகொள்ள இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்கள் சேர்த்தது. அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 61 ஓட்டங்களும், கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த ரோட்ரிக்ஸ் 44 ஓட்டங்களும் குவித்தனர்.

இந்த தொடரில் பலம்மிக்க அணியாக விளங்கிய இங்கிலாந்து, நேற்றைய போட்டியில் ரன் அவுட்களால் வீழ்ந்தது எனலாம். மூன்று முக்கியமான ரன் அவுட் அந்த அணியை தோல்வியை நோக்கி நகர்த்தியது.

இங்கிலாந்து அணிக்கு முதல்கட்ட வீராங்கனைகள் ஓரளவு சிறப்பான தொடக்கம் கொடுத்தாலும், வெற்றியை நெருங்க வைத்தது நடாலி ஸ்கிவர் மற்றும் எமி ஜோன்ஸ் இருவரும் இணைந்துதான். இறுதிக்கட்டத்தில் இவர்கள் களத்தில் இருந்தால் வெற்றி என்ற நிலை இருக்க, தனியா பாட்டியா மற்றும் ஸ்மிருதி இணைந்து 41 ஓட்டங்கள் எடுத்திருந்த நடாலி ஸ்கிவரை ரன் அவுட் செய்தனர்.

இது 19ஆவது ஓவரின் கடைசி பந்தில் நிகழ்ந்தது.

இதற்கு முந்தைய ஓவரில்தான் 31 ஓட்டங்கள் எடுத்திருந்த எமி ஜோன்ஸை இந்திய வீராங்கனைகள் ராதா யாதவ் மற்றும் சினே ராணா இணைந்து ரன் அவுட் செய்தனர்.

இந்த ரன் அவுட்களால் இங்கிலாந்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறியது. இதேநேரம் இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மற்றோர் அரையிறுதியில் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இதில் வெற்றிபெறும் அணியுடன் இந்திய அணி இறுதிப்போட்டியில் மோதவுள்ளது. (ஐ)




# ரோஹித் சர்மா புதிய மைல்கல்!

புளோரிடா, ஓக. 08

சர்வதேச கிரிக்கெட்டில்16,000 ஓட்டங்களைக் கடந்தார் ரோஹித் சர்மா. இந்த மைல்கல்லை எட்டிய ஏழாவது இந்திய வீரர் என்ற பெருமையும் அவர் பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த போட்டியிலேயே அவர் இந்த மைல்கல்லை எட்டினார்.

இந்தப் போட்டியில் ரோஹித் சர்மா 33 ஓட்டங்களை எடுத்தபோது, சர்வதேச அரங்கில் 16,000 ஓட்டங்களைக் கடந்த 7ஆவது இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

அவர் டெஸ்டில் 3,137 ஓட்டங்னும், ஒருநாள் போட்டியில் 9,376 ஓட்டங்களும், இருபது - 20 போட்டியில் 3,487 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, ராகுல் டிராவிட், விராட் கோலி, வீரேந்திர சேவாக் மற்றும் எம். எஸ். டோனி ஆகியோர் 16,000 ஓட்டங்களைக் கடந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தென்னாபிரிக்கா அபார வெற்றி!

பிரிஸ்டல், ஓக. 08

அயர்லாந்துக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் அசத்திய தென்னாபிரிக்க அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, அயர்லாந்துக்கு எதிராக 2 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி பிரிஸ்டலில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன் டி கொக் (7), வான் டெர் டுசென் (10) ஏமாற்றினர். அபாரமாக ஆடிய ரீசா ஹென்றிக்ஸ் (74), மார்க்ரம் (56) அரைச்சதம் கடந்தனர்.

டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (24), டுவைன் பிரிட்டோரியஸ் (21) ஆறுதல் தர தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 211 ஓட்டங்களைக் குவித்தது.

கடின இலக்கை விரட்டிய அயர்லாந்து அணிக்கு ஸ்டிர்லிங் (18), அணித் தலைவர் பால்பிர்னி (14) சுமாரான தொடக்கம் கொடுத்தனர். ஹரி டெக்டர் (6), கரேத் டெலானி (2), கர்டிஸ் கேம்பர் (0), மார்க் அடைர் (2) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

லார்கன் டக்கர் (78), ஜார்ஜ் டாக்ரெல் (43) ஓரளவு கைகொடுத்தனர். அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்கா சார்பில் கேஷவ் மஹராஜ், பார்னல், ஷாம்சி தலா 2 விக்கெட் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருதை ஹென்றிக்ஸ் வென்றார். (ஐ)

# சர்வகட்சி அரசுக்கான முன்மொழிவுகள் பங்கேற்ற கட்சிகளுக்கு வழங்கப்படும்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



**கொழும்பு, ஓக. 08**
**சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்காக பல நாட்களாக இடம்பெற்ற கலந்துரையாடலில் ஒவ்வொரு தரப்பினரும் முன்வைத்த யோசனைகள் தொகுக்கப்பட்டு இன்று திங்கட்கிழமை அனைவருக்கும் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில தமிழ் கட்சிகள் உட்பட சில அரசியல் கட்சிகளுடனான் பேச்சுவார்த்தை மீதமுள்ள நிலையில் அவர்களும் அரசியல் பேதங்களை ஒதுக்கிவிட்டு கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது அரசியல் சீர்திருத்தங்களினால் மாத்திரம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றும் எதிர்கால உலகத்திற்கு ஏற்ப பாடத் திட்டங்கள் மாற்றியமைக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டினார்.

இதேவேளை நாட்டை கட்டியெழுப்பும் பொதுவான வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்றும் அதன் மூலமே படிப்படியாக முன்னேற முடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பிலான கலந்துரையாடலில் அனைத்து அரசியல் கட்சிகளின் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேட்டுக்கொண்டார். (ஐ)

# எதிரணியை சேர்ந்த பலர் அமைச்சர்களாக தயார்!

## பிரதமர் தினேஷ் சொல்கிறார்



கொழும்பு, ஓக. 08
“எதிரணியில் பலர் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பது மட்டுமன்றி அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளனர். அதில் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர். தம் இனம் சார்ந்த மக்களின் நலன் கருதி அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.” - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சர்வகட்சி வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் சர்வகட்சி அமைச்சரவையும் நியமிக்கப்படும். ஆளும் - எதிர்த் தரப்பு என்று வேறுபாடின்றி மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஓரணியில் சங்கமித்து சர்வ கட்சி அரசை நிறுவ வேண்டும். அப்போது தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டை மிக விரைவாக மீட்டெடுக்க முடியும்.

கட்சி அரசியல் செய்து ஆட்சி நடத்தினால் அதனால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. சர்வதேச நாடுகளும் எமக்கு உதவி புரிய முன்வர மாட்டா. எனவே, கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்காக - மக்களுக்காகப் பலமான சர்வகட்சி அரசை நாம் ஒன்றிணைந்து நிறுவ வேண்டும்” - என்றார். (ஐ)

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 08
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 167 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது .

இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 5 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

இதேவேளை நான்காவது கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளுக்காக நடமாடும் சேவை ஆரம்பிக்க தீர்மானிக்கபட்டுள்ளதோடு மருத்துவ அதிகாரி காரியாலயங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சர்வகட்சி அரசாங்கம் அமைந்தாலே அரசியல் ஸ்திரம் நிரூபிக்கப்படும்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஓக. 08
சர்வதேச நிறுவனங்கள், அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதன்படி சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜைக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் மத்தியில், நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதியாக உள்ளது என்பதை அரசாங்கம் காண்பிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பேசிய மைத்திரிபால சிறிசேன, வெகுவிரைவில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அதன் மூலமே ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே காணப்படும் நிலையில் பாராளுமன்றத்தில் சில கட்சிகள் அதனை விரும்பவில்லை. அரசாங்கம் முயற்சிக்குமாயின் ஒரு மாத காலத்துக்குள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும் என்றும் அது நடந்தால் அமைச்சுப் பதவிகளை ஏற்பதா இல்லையா என்று பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# போராட்டக்காரர்களை முடக்குவது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்

## சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அமைப்பு

கொழும்பு, ஓக. 08
நாட்டில் இடம்பெற்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தவர்களை முடக்கும் செயல்பாட்டில், தற்போதைய ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இது உண்மையில் அசாதாரணமான விடயம் என்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் சிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

“போராட்டக்காரர்களை முடக்குவது என்பது வெகட்கப்பட வேண்டிய விடயமாகும். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையடுத்தே மக்கள் எழுச்சிப் போராட்டமானது வெடித்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட சிறீ லங்கா பொதுஜன பெரமுனவே நாட்டில் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்தது. இவ்வாறான நிலையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் ஆட்சிக்கு வந்த நபர், ராஜபக்ஷர்களுக்கு எதிராக ஒன்றுதிரண்டவர்களை தேடி சென்று கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக போராடியவர்களை குற்றவாளிகளாக சித்தரிக்கும் நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சர்வகட்சி போராட்டக்காரர்கள் என்ற ஒரு தரப்பினர் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

போராட்டக்களத்தில் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை தவிர ஏனையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்ற உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்களை யார் முன்வைக்கின்றனர் என்றே நான் கேட்கின்றேன்.

கல் வீசினார்கள் என்ற யார் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து என்றே நான் கேட்கின்றேன். நாட்டின் அரசியல்வாதிகளுக்கு வால்பிடிப்பவர்களே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.நாடு மோசமான சீரழிவை எதிர்கொள்ளும்வரை அதற்கு பொறுப்பானவர்களுக்கு துணைபோனவர்களே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்” என்றார். (கே)

# மனித உரிமைகள் ஆணையரின் கருத்து தொடர்பில் அரசு ஆராயும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஓக. 08
“இலங்கை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள தருணத்தில், இலங்கைப் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஏன் கூறினார் என்பது தொடர்பில் ஆராய்கின்றோம்.”

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரின்போது மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களில் ஈடுபட்டனரென அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அமைப்பின் ஆணையாளர் மிச் செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பில் அரசு கவனம் செலுத்தும். நாடு பல துறைகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் ஏன் இந்த அறிவிப்பு வந்தது என்பது தொடர்பில் ஆராய்வோம். இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்படும். அதன்பின்னர் இலங்கை அரசின் உத்தியோக பூர்வ பதிலை வெளியிடுவோம்”

- என்றார்.

# தேசிய சிறுவர் மருத்துமனையில் 12 குழந்தைகளுக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 08
கொழும்பு தேசிய சிறுவர் மருத்துவமனையில் 12 குழந்தை களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அதன் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கொரோனா தொற்று உறுதியாகும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

எனவே, டெங்கு நுளம்புகளிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## ஐ. நா. மனித...

மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை வரவேண்டும் என கர்தினால் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையில், இலங்கை வரும் குழுவினரின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 51ஆவது அமர்வில் புதிய மனித உரிமைகள் ஆணையாளர் அல்லது இடைக்கால ஆணையாளர் சமர்ப்பிப்பார்.

இந்த அறிக்கையை தயாரிப்பதில் முக்கிய நபராக ரொனிமுங்கொவன் காணப்படுவார். ஜெனிவாவில் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு அனுசரணை - இணை அனுசரணை வழங்கிய நாடுகள் கொழும்பிலும் ஜெனிவாவிலும் சந்தித்து இலங்கை குறித்து புதிய தீர்மானத்தை ஆராய்ந்துள்ளன.

மனித உரிமைகள் பேரவையின் அமர்வு செப்ரெம்பர் 12ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை இடம்பெறும்.

இந்த வருடம் மே மாதம் வரை இலங்கை தொடர்பான முகாண்மை குழு முன்னைய தீர்மானத்திற்கு மேலும் இரண்டு வருடக கால அவகாசம் வழங்குவது குறித்து ஆராய்ந்து வந்தது. (2022 செப்ரெம்பர் முதல் 2024 வரை) எனினும் காலிமுகத்திடலில் - அலரி மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டமை போன்றவை இலங்கை தொடர்பான குழுவினரின் மனமாற்றத்துக்கு காரணமாக அமைந்தன என்று கூறப்படுகின்றது.

## அமைச்சு...

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

ஒற்றுமை என்பது அறிக்கை விடுவதில் மட்டும் இருக்க கூடாது செயல் வடிவத்திலும் இருக்க வேண்டும் என்றும் கூறிய அவர்,

நாம் இன்றும் நீதியை கோரிக் கொண்டிருக்கிறோம் என்றால் இதற்கு பிரதானமாக இரு காரணங்கள் உள்ளன. ஒன்று நம்மிடமுள்ள ஒற்றுமையின்மை மற்றும் இந்தியா விடயத்தில் நமது தமிழ் தரப்பு செய்த மாபெரும் தவறு இவையே நமது இன்றைய நிலைக்கு காரணம். இல்லையென்றால் எமது தமிழர் தாயகக் கொடி ஐ. நா. மற்றும் சர்வதேச நாடுகளி பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கும் - என்று நேற்று நடந்த ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் உரையாற்றும்போது தெரிவித்தார். (ஐ)

## கிளிநொச்சி...

கண்டாவளை பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதியில் 6 பேர் கொண்ட குழுவினர் பேருந்தை மறித்து சாரதி, நடத்துநர் தாக்கப்பட்டனர். இதில், அவர்கள் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளபோதிலும், ஏனைய மூவரையும் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதன் ஊடாகவே தமது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என அவர்கள் தெரிவித்தனர். 6 பேரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய பின்னரே தமது போராட்டம் கைவிடப்படும் என்றும் கிளிநொச்சி சாலையினர் தெரிவித்தனர்.

தமக்கு நீதி கிடைக்காதுவிடின் ஏனைய பேருந்து சாலைகளையும் போராட்டத்துக்கு ஆதரவு கேட்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## த. தே. கூட்டமைப்...

பலமிழக்கிறது. கூட்டமைப்பிலிருந்து போனவர்கள் திரும்பி வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆலோசனை பெறும் வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும். இப்போது வந்தவர்கள் தமிழ் அரசு கட்சியையும் கூட்டமைப்பையும் இல்லாது ஒழிப்பதை ஏற்க முடியாது.

ஆயுதப் போராட்ட இயக்கங்கள், விடுதலைப் புலிகள் உட்பட ஒன்றிணைய வேண்டும். அவர்களை அரசியல் கட்டமைப்பிலே அரவணைத்து இணைந்து செயல்படும் வாய்ப்பை இந்த மாநாடு ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

இந்த கடன் நிறுத்தப்பட்டமையை அடுத்து கடவத்தை - மீரிகம இடையிலான 37 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கிய திட்டத்தில் பணிபுரிந்த சுமார் 500 சீனர்களும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்த கடன் நிறுத்தல் காரணமாக சுமார் 2000 இலங்கையர்களின் தொழில்கள் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன. (ஐ)

## இலங்கைக்கான...

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தப்போவதில்லை என்று கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தது. இந்நிலையிலேயே ஜெய்க்கா நிறுவனம் 57 கோடி டொலர் நிதியுதவியை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின்கீழ் ஜப்பானின் தாய்செய் நிறுவனம், விமான நிலையத்தின் இரண்டாவது முனைய விஸ்தரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதனால், இந்தப் பணிகளை நிறுத்தியுள்ள தாய்செய் நிறுவனம், தொழிலாளர் ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்ய முடிவு செய்துள்ளது. (ஐ)

## நாடு திரும்பும்...

வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. மேலும், தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு கோட்டாபய வர வாய்ப்புள்ளது.

பொதுஜன பெரமுனவுக்கு பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை பலத்தால் தேசியப் பட்டியல் ஊடாக கோட்டாபய பாராளுமன்றத்துக்கு வந்தால் அவர் பிரதமராகும் வாய்ப்பு உள்ளது.

பாராளுமன்றத்தில் 22 ஆவது அரசமைப்பு திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டால் பாராளுமன்றத்துக்கும் பிரதமருக்குமான அதிகாரங்கள அதிகரிக்கும். இதன் மூலம் கோட்டாபயவுக்கு ஓரளவு அதிகாரம் கிடைக்கும். இது இலங்கை அரசியலிலும் முக்கியம் பெறும் என்றும் அந்தத் தரப்புக்கள் கூறின. (ஐ-சி)

## தமிழ்த்...

சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியை தொடர்வார்", - என்று தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் கூறினார்.

இதேபோன்று இந்த மாநாட்டில் உரையாற்றிய ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். ஆயுதப் போராட்ட இயக்கங்கள், விடுதலைப் புலிகள் உட்பட ஒன்றிணைய வேண்டும். அவர்களை அரசியல் கட்டமைப்பிலே அரவணைத்து இணைந்து செயல்படும் வாய்ப்பை இந்த மாநாடு ஏற்படுத்தியுள்ளது" - என்றார்.

இதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியாகவுள்ள ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் "இணைந்து பயணிக்க விருப்பம் தெரிவிக்கிறோம், இணைவதற்கு முன்முயற்சி எடுக்கப்பட வேண்டும்", என்று கூறினார். (ஐ)

# குரங்கு அம்மையை கண்டறிய இன்றுமுதல் பரிசோதனைகள்!

கொழும்பு, ஓக. 08

குரங்கு அம்மை தொற்றுக்கு உள்ளானவர்களை இன்றுமுதல் கண்டறிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான பரிசோதனைக் கருவிகள் உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் கலாநிதி அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

பொரளை மருத்துவ பரிசோதனை நிறுவனம் மற்றும் கண்டி பொது வைத்தியசாலைக்கு இன்றுமுதல் உரிய பரிசோதனை கருவிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# களஞ்சியசாலையை உடைத்து சிலிண்டர் திருடியோர் கைது!



யாழ்ப்பாணம், ஓக. 08

ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாஃப் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சியசாலையை உடைத்து 52 வெற்று சிலிண்டர்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர் உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன் ஓட்டுமடம் பகுதியில் உள்ள லாஃப் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 7 இலட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 52 வெற்றுச் சிலிண்டர்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (ஐ-3)

# கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, ஓக. 08

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் பிரதிநிதிகளும் இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டத்திட்ட மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைமை திருத்தம் தொர்பில் கலந்துரையாடுவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ஐ)

## இணைந்து...

அதிகாரத்தை கையிலெடுத்து மக்களுக்கு அபிவிருத்தியோடு வேலைவாய்ப்பை உருவாக்க விட்டால் இளைஞர்கள் இங்கிருக்க மாட்டார்கள்.

நாட்டில் அந்நிய செலாவணியை தமிழர்களால் மட்டுமே கொண்டுவர முடியும். தமிழ் தமக்களின் ஒத்துழைப்பு இன்றி பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது இலகுவாதனல்ல என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## லிட்ரோ எரிவாயு...

மாக எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த 22 நாட்களில் 27 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பல வருடங்களின் பின்னர் கடந்த ஜூலை மாதம் பெரும் இலாபத்தை லிட்ரோ நிறுவனம் ஈட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சீன கப்பல்...

சீனாவின் இராணுவத்துக்கு சொந்தமான யுவான் வாங் 5 என்ற தொழில்நுட்ப கப்பல் செய்மதி தகவல்களைப் பெறுவதுடன் அவற்றை கட்டுப்படுத்தியும் வருகின்றது. இந்தக் கப்பல் வரும் 11ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

இது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்று தெரிவித்து அந்த நாடு இதற்கு பெரும் எதிர்ப்பை வெளியிட்டது. அத்துடன், இந்திய நலனைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்றும் அந்த நாடு எச்சரித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீனா, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர்களை கம்போடியாவில் சந்தித்தார். இதன்போது, நடத்தப்பட்ட பேச்சுகளைத் தொடர்ந்து சீனாவின் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வராது என்று உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (ஐ-சி)

ஈழநாடு
Eelanadu

# போராட்டக்குழுவினருடன் ஜனாதிபதி நல்லதோர் இணக்கத்துக்கு வரவேண்டும்!

## கரு ஜெயசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஓக. 08

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை கவனத்தில் கொள்ளுமாறும் அரசியல் சீர்திருத்தங்களுக்கான முன்வந்திருக்கும் போராட்டக் குழுவினருடன் பேச்சுக்களை மேற்கொண்டு தாமதம் இன்றி நல்ல தோர் இணக்கப்பாட்டுக்கு வருமாறும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து கூறுகையில்,

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கும், மின்சாரம் மற்றும் எரிபொருளை விநியோகிப்பதற்கு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதும் வாழ்க்கை செலவை குறைப்பதற்கும் தான் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தமை நாட்டுக்கு நன்மை பயக்கும் கொள்கையாக நாம் கருதினோம்.

பாராளுமன்றத்தின் அதிகாரங்களை மேம்படுத்துவதின் ஊடாக பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தில் நேரடியாக பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் 19ஆவது திருத்தத்தை மீள் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், தொழிற்சங்க தலைவர்களை கைது செய்தல் ஜனாதிபதியின் சிம்மாசன உரைக்கு முரணானது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர், இலங்கை வங்கி தொழிலாளர் சங்கத்தின் அதிகாரிகள் கைது செய்தமை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்பதை வலியுறுத்தும் அதேவேளை எமது கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாட்டின் எதிர்கால நலனுக்காக அனைத்துக் கட்சிகள் மற்றும் அழுத்த குழுக்களுடன் பொது இணக்கப்பாட்டுடன் செயல்படுவதன் அவசியம் கருதி நாம் இதை வலியுறுத்துகிறோம். அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தை தவறிவிட்டால் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்த சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் சர்வதேச உதவிகளை பெறுவதற்கும் அது தடையாக அமைந்து விடும் துரதிர்ஷ்டவசமாக இவ்வகையான சூழ்நிலை ஏற்பட்டால் நாட்டிற்கும் எந்த பலனும் ஏற்படாது. அதேபோன்று நாட்டின் பொதுமக்கள் அபிலாசைகளையும் அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# இந்த வாரத்தில் புதன்கிழமை பாடசாலைகள் நடைபெறும்!

கொழும்பு, ஓக. 08

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள பாடசாலை களின் கல்வி நடவடிக்கைளை திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சு அறிவித் துள்ளது.

தற்போது திங்கள், செவ் வாய் மற்றும் வியாழக் கிழமை களில் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுவரும் நிலையில் அடுத்த வாரம் வியாழக்கிழமை 11ஆம் திகதி அரசாங்க விடு முறை என்பதால் கல்வியமைச்சு இவ்வாறு தீர்மானித்துள்ளது.

வெள்ளிக்கிழமையன்று மாணவர்களுக்கு வீட்டை அடிப்படையாகக்கொண்ட கல்வி நடவடிக்கையை முன் னெடுத்தல் அல்லது இணைய வழி மூலமான கல்வி நடவ டிக்கைகளை முன்னெடுக்கு மாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் அனைவரும் ஆகக் குறைந்தது வாரத்தில் 3 நாட்கள் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# பாராளுமன்ற குழுக்களை நியமிக்கும் பணிகள் இந்த வாரம் ஆரம்பமாகும்!

கொழும்பு, ஓக. 08

பாராளுமன்ற கூட்டத்தொடர் முடிவுறுத்தப்பட்டதனால் செயலிழக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) உட்பட அனைத்து குழுக்களையும் நியமிக்கும் நடவடிக்கை இந்த வாரம் ஆரம்பிக்கப்படும்.

அதன் பிரகாரம் பாராளுமன்றத்தில் குழுக்களை நிறுவும் பிரதான குழுவான பாராளுமன்ற தெரிவுக்குழு நாளை 9ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய பின்னர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை,பாராளுமன்ற குழுக்களுக்கு அந்ததந்த கட்சிகள் மூலம் முன்னிலைப்படுத்தப்படும் உறுப்பினர்கள் தொடர்பில் வேட்புமனு கோரப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதியால் முடிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஒருசில குழுக்கள் தவிர்ந்த 50இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற குழுக்கள் செயலிழக்கப்பட்டன. என்றாலும் பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழு, துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் பாராளுமன்ற விசேட குழு ஆகியவை தொடர்ந்து அவ்வாறே செயல்படும்.

அத்துடன், செயல்குழுக்கள் செயலிழந்தாலும் அவைகளினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் வேறு நடவடிக்கைகளை அதில் இருந்து தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்றே பாராளுமன்ற அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டி இருந்தார்.

அத்துடன், பாராளுமன்ற கூட்டத் தொடர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் கடந்த மாதம் 28ஆம் திகதி விசேட வர்த்தமானி மூலம் முடிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெற்றோல் தாராள இருப்பு ஆனால், மக்கள் இல்லை!

வடமராட்சி, ஓக. 08

மக்கள் நீண்ட வரிசைகளில் பல நாட்களாக வரிசையில் காத்திருந்து எரிபொருளைப் பெற்றனர். ஆனால், நேற்றைய தினம் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இருந்தும் அதனைப் பெறுவதற்கு மக்கள் இருக்கவில்லை.

நெல்லியடி, மந்திகை, புலோலி, கொட்டடி உட்பட அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நேற்று 9 மணி முதல் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. ஆனால், பெற்றோல் நிரப்புவதற்காக ஒருசிலரே வந்து எரிபொருளைப் பெற்றுச் சென்றனர். (ஐ-2)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி
ஓம் ரீ.வி நடாத்தும்

சைவம் தழைத்தோங்க....
சமய அறிவுப் போட்டி

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.



செந்தமிழ் சொல்லருவி
ச. லலீசன் நடாத்தும்
சமய அறிவுப்போட்டி
ஆலய வடகிழக்கு வீதியில்
அமைந்திருக்கும்
நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும்
மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.



போட்டி தொடர்பான விதி முறைகள்

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804

# நாடு திரும்பும் கோட்டாபயவை பஸில் வரவேற்க விரும்பவில்லை?

கொழும்பு, ஓக. 08

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வரவேற்க பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தயாராகி வருகின்றனர். ஆனால், அவரின் சகோதரரும் பெரமுன கட்சியின் நிறுவுநருமான பஸில் ராஜபக்ஷ அவரை வரவேற்க விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் அந்தக் கட்சி வட்டாரங்கள் மேலும் கூறியவை வருமாறு,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு வருகை தரும் நாளில் அவரை கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்துக்கு சென்று வரவேற்க பெருமளவிலான பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த செய்தி வெளியானதும் பஸில் ராஜபக்ஷ சற்று வருத்தமடைந்தார். கோட்டாபயவை வரவேற்க கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு எவரும் செல்லாதீர்கள். அவ்வாறு சென்று அவரை வரவேற்று விளம்பரப்படுத்தாதீர்கள் என்றும் பஸில் சிலருக்கு தெரிவித்துள்ளார்.

கோட்டாபயவை பெரும் எடுப்பில் வானூர்தி நிலையத்துக்கு சென்று வரவேற்பதற்கான நேரம் இதுவல்ல என்பதே பஸிலின் நிலைப்பாடு. எனினும், பஸில் இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெவ்வேறு நபர்கள் ஊடாக செய்திகளை அனுப்பினாலும் அதனை அவர்கள் பின்பற்றுவார்களா என்பது சந்தேகமே.

ஏனெனில், பஸில் அவ்வாறு கூறினாலும், கோட்டாபயவை மகிந்த பல சந்தர்ப்பங்களில் அழைத்து உடனடியாக நாடு திரும்புமாறு கேட்டுள்ளார். "நீ நாட்டை விட்டு வெளியேறியது தவறு. நாங்கள் உன்னை போகச் சொல்லவும் இல்லை" என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தாரென்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், நாடு திரும்பவுள்ள கோட்டாபயவுக்கு பாதுகாப்பு, தங்குமிட வசதிகள் முன்னாள் ஜனாதிபதிக்கான சிறப்புரிமைகள் கிடைக்க வேண்டும். ஆனால், கோட்டாபய தனது வீடு அமைந்துள்ள மிரிஹானவிலேயே குடியேறுவார் என்று கூறப்படுகின்றது. (ஐ-சி)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
07.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கபாலி,காஸ்மோரா
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் டைம்
06.30 மணி : நலந்தானா



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு